Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 284 | புதன்கிழமை | ஆவணி 22 ஆம் நாள் 08 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 16 விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## விபத்தில் உயிரிழந்த இளைஞனுக்கு கொரோனா!

வவுனியா, செப். 8
வவுனியா ஈரட்டை பகுதியில் கடற்படையின் பேருந் துடன் மோட்டார் 15 ►

## வடக்கில் 2 மணிநேரத்துக்கு ஒருவர் கொரோனாவால் சாவு

(செய்தி பக்.3)

### ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளருக்கு

# தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் பிறிதொரு கடிதம் அனுப்ப முயற்சி?

**உதயமானதா தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமையம்? நேற்றுக் கட்சிக்குள் பெரும் சலசலப்பு**

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 8


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை விட்டு தனித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பியிருந்த நிலையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளருக்கு தனியாக கடிதம் அனுப்ப முயற்சி எடுப்பதாக வெளியான தகவலால் தமிழ் அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பு உருவாகியுள்ளது. 15 ►

Ilankai Tamil Arasu Kadchi
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

## செம்மணியில் கொல்லப்பட்ட கிருஷாந்திக்கு நேற்று அஞ்சலி



யாழ்ப்பாணம், செப். 8
யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் அப்போதிருந்த இராணுவ முகாமில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட கிருஷாந்தியின் 25ஆவது நினைவுதினம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் அலுவலகத்தில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. 15 ►



## மேலும் 184 பேர் சாவு மொத்தக் காவு 10,504

கொழும்பு, செப். 8
இலங்கையில் மேலும் 184 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் 15 ►

## பாடசாலைகளை திறக்க தற்போது வாய்ப்பில்லை



*பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் நேற்றுத் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 8
தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைகளை மீண்டும் திறக்கும் எந்தத் 15 ►

### மன்னார் எரிவாயு வளத்தால்

## நாட்டின் கடனைப்போன்று மூன்று மடங்கு வருமானம்

மன்னார், செப். 8
மன்னார் கடற்பரப்பிலுள்ள 267 பில்லியன் டொலர் பெறுமதியான எண்ணெய் மற்றும் எரிவாயு வளத்தினால் நாட்டின் மொத்த கடன் தொகையை போன்று மூன்று மடங்கு வருமானம் ஈட்ட 15 ►

### வவுனியாவில்

## இரண்டு தினங்களில் 19 பேர் உயிரிழப்பு!

வவுனியா, செப்.8
வவுனியாவில் கடந்த இரு தினங்களில் 19 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத் துறையின் தகவல்கள் 14 ►

## பெரிய வெங்காயம் விலை அதிகரிப்பு!

கொழும்பு, செப். 8
பெரிய வெங்காயத்துக்கு இன்று முதல் இறக்குமதி வரி விதிக்கப்படவுள்ளது என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.
40 ரூபா வரையில் இந்த 15 ►

## லண்டன், அமெரிக்காவுக்கு பயணமாகிறார் கோத்தாபய

*ஐ.நா. பொதுச்சபையில் முதல் தடவையாக உரை*



கொழும்பு, செப். 8
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இம்மாதம் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளவுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
அதன்படி, ஜனாதிபதி முதலில் இங்கி 14 ►

## நேற்று 2,960 பேருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, செப். 8
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் மேலும் 2 ஆயிரத்து 960 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். 14 ►

## எரிகாயங்களுக்கு உள்ளான குடும்பப்பெண் நேற்றுச் சாவு

யாழ்ப்பாணம், செப். 8
எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பப் பெண் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
[illegible] 15 ►



### மகிந்தவின் புதல்வன்

## ஜோஷித ராஜபக்ச எம்.பி. ஆகின்றாரா?

கொழும்பு, செப். 8
நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் மீண்டும் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்படவுள்ள நிலையில் அவரின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குப் 15 ►

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா இக்கட்டிலும் திறமையாக செயற்பட்ட பதில் பணிப்பாளர் குழாம்

## யாழ். போதனா மருத்துவமனையின் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கக் கிளை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.8

கொரோனாத் தொற்றைக் கையாளும் குறிப்பிட்ட நோக்கத்துக்காக அரசு யாழ்ப்பாணத்தில் எவரையும் நியமிக்கவில்லை. வடக்கில் எந்த அவசர நிலைமையையும் அறிவிக்கவில்லை. கொரோனாத் தொற்று வடக்கில் தீவிரமுற்ற இக்கட்டான காலப் பகுதியில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.பவானந்தராஜா மற்றும் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் வி.சண்முகராஜா ஆகியோர் நோயாளர்களுக்கான விரிவான சேவைகளை நன்கு திட்டமிட்டு ஒருங்கிணைத்துச் செயற்படுத்தியமையை நாம் முழு மனதுடன் பாராட்டுகின்றோம்.

இவ்வாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக் கிளை தெரிவித்துள்ளது. இந்தக் கிளை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

கொரோனாத் தொற்று நம்மை எவ்வாறு பாதிக்கிறது மற்றும் இதை எதிர்த்து மருத்துவர்களும் இதர சுகாதாரப் பணியாளர்களும் அயராது போரிடுகின்றனர் என்பது மருத்துவ சமூகத்துக்குத் தெரியும். சமூகத்தில் இருந்து எதையும் எதிர்பாராமல் உழைக்கும் இவர்கள் தம்மை தம் நலத்தை தமது உடல் ஆரோக்கியத்தை தியாகம் செய்து மக்களுக்காக பாடுபடுகின்றனர். உண்மையில் தடுப்பு சுகாதார சேவை மற்றும் மருத்துவ சுகாதாரப் பணியாளர்கள் இந்த நோயைத் தடுக்கவும் சிகிச்சையளிக்கவும் தங்கள் அதிகபட்ச முயற்சியைப் பயன்படுத்துகின்றனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நெருக்கடியான நேரம் தொடங்கியபோது மேற்குறிப்பிட்ட பணிப்பாளர்கள் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றனர்.

நிறுவனத்திற்குள் அடுத்த கொவிட் அலையை சமாளிக்க எந்த முன் திட்டமும் இல்லாத சூழலில் இவர்கள் நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற போது திடீரென கொவிட் விடுதிகளை விரிவுபடுத்துவது மற்றும் பணியாளர்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், பிற அத்தியாவசிய சேவைகளை ஒதுக்குவது அவர்களுக்கு ஒரு சவாலாக இருந்தது.

அவர்கள் முன் இருந்த சவாலை மிகைப்படுத்தப்பட்ட பரப்புரைகள் எதுவுமின்றி ஊடக விளம்பரங்கள், மார்தட்டல்கள், சுய தம்பட்டங்கள் எதுவுமின்றி உரிய புள்ளிவிவர ஆதாரங்களுடன் தம்மிடமுள்ள வளங்களைப் பயன்படுத்தி மிகச் சரியாகக் கையாண்டனர். அவர்கள் மேற்கத்திய உலகத்துடன் ஒப்பிடத்தக்க மருத்துவ நெறிமுறைகளுடன் தங்கள் கடமைகளைச் செய்தனர். அவர்கள் பேச்சு மூலம் பிரச்சனைகளைத் தீர்த்தனர். மேற்குறிப்பிட்ட நிர்வாகிகள், மருத்துவக் குழுக்கள் மற்றும் தடுப்பு துறைக் குழுக்களுக்கு உரிய நேரத்தில் அர்ப்பணிப்புடன் சேவை செய்ததற்கு நாம் உளமார நன்றி தெரிவிக்கின்றோம். வருங்கால நிர்வாகிகள் தவறான பரப்புரைகள் இல்லாமல் சரியான வழியைப் பின்பற்றுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

தேவை ஏற்படின் போதிய ஆதாரங்களை வழங்கி மக்களை தெளிவுபடுத்தவும் நாம் தயாராக உள்ளோம் - என்றுள்ளது. (எ-இ)

## பிக்குணியின் ஆருடத்தால் பிரபலங்கள் கதிகலக்கம்!

கொழும்பு, செப்.8

இலங்கையில் இன்னும் இரண்டு மாதங்களில் நாட்டை நேசித்த பிரபல தலைவர் ஒருவர் உயிரிழப்பார் என பல்லேகலை கோதமி விகாரையின் விகாராதிபதி கோத்மி பிக்குனி ஆருடம் கூறியுள்ளார். சிங்கள இணையத்தள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

எனக்குள் பேய் புகுந்துள்ளது, சாமி வந்துவிட்டதென எல்லாம் பலர் கூறுகின்றார்கள். அப்படி என்றெல்லாம் எனக்குள் தோன்றும் விடயத்தைத்தான் நான் கூறுகின்றேன். நான் கூறுவதும் அவ்வாறே நடக்கும்.

இலங்கையில் பிரபலமான தலைவர் இன்னும் 2 மாதங்களுக்குள் உயிரிழப்பார். நான் பொறுப்புடன் தான் இதைக் கூறுகிறேன். அவர் மக்களால் அதிகமாக நேசிக்கப்பட்ட, பல்வேறு விடயங்களை செய்த ஒருவராகும். யாராலும் எதிர்பார்க்க முடியாத ஒருவரே இறக்கவுள்ளார். அவர் சர்வதேச அளவில் புகழ் பெற்ற ஒருவராவார். அதை நான் தற்போதே பொறுப்புடன் கூறிக் கொள்ள எதிர்பார்க்கின்றேன். அவற்றை நம்மால் தடுக்க முடியாது. எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் யாராலும் எதிர்பார்க்க முடியாத இரண்டு பிரபலங்கள் படுத்தபடுக்கையாக்கும் கொடூர நோய் ஒன்றால் பாதிக்கப்படுவார்கள். அவர்களில் ஒருவர் பேச்சாற்றல் கொண்ட பிரபல பிரபுக்களில் ஒருவராவார். அவர்கள் கொடூர நோய்களினால் பாதிக்கப்பட்டு மிக மோசமான நிலைக்குள்ளாகுவார்கள் என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

## காரைக்கால் சிவன் கோயில் சூழலில் விச ஜந்து நடமாட்டம்

### அச்சத்தில் பிரதேச மக்கள்

யாழ்ப்பாணம், செப்.8

இணுவில் காரைக்கால் சிவன் கோவிலை அண்மித்த பகுதிகளில் நாக பாம்பு உள்ளிட்ட விச ஜந்துகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என்றும், அதனால் அச்சத்துடன் வசிக்க வேண்டியுள்ளது என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் சி.கௌசல்யா தெரிவித்துள்ளதாவது

இந்துக்கள் மத்தியில் நாக வழிபாட்டு முறை உள்ளமையால், நாக பாம்பை அடித்துக் கொல்வதற்குப் பலருக்கும் தயக்கம். வீடுகள் மற்றும் விவசாய காணிகளுக்குள் வரும் நாகபாம்பு உள்ளிட்ட விஷ ஜந்துக்களை உயிருடன் பிடித்துவந்து சிவன் கோவிலை அண்டிய பகுதிகளில் விட்டுச் செல்கின்றனர்.

பழமைவாய்ந்த ஆலயமான காரைக்கால் சிவன் கோவிலைச் சுற்றி பல பாம்புப் புற்றுகள் உள்ளன. அந்த புற்றுக்களுக்குள் தற்போது நாக பாம்பு உள்ளிட்ட பாம்புகள் குடிகொண்டுள்ளன. அவை தற்போது ஆலயத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள்ளும் , விவசாய காணிகளுக்குள்ளும் படையெடுக்கின்றன. அதனால் அந்தப் பகுதி மக்கள் பாம்புகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அதையடுத்து வனவிலங்கு பாதுகாப்புத் துறையின் உதவியைப் பெற்றுள்ளோம். ஆலயச் சூழலில் நாகபாம்பு உட்பட பாம்புகள், விச ஜந்துகளைக் கண்டால் சமூகப் பொறுப்புடன் 0779507269 என்ற இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு அறிவியுங்கள். ஆலயத்தை அண்மித்த பகுதிகளில் பாம்புகள் உள்ளிட்ட விஷ ஜந்துக்களைக் கொண்டுவந்து உயிருடன் விடுவதனைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன- என்றார். (எ-இ)



## கந்தளாயில் பதுக்கப்பட்ட 45,000 கிலோ நெல் மீட்பு!

திருகோணமலை, செப்.8

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 45 ஆயிரம் தொன் நெல் மூடைகளைப் பதுக்கி வைத்திருந்த களஞ்சியசாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளால் நேற்று கந்தளாய் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது மூன்று நெற் களஞ்சிய சாலைகளில் 45 ஆயிரம் தொன் நெல் மூடைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து அந்தக் களஞ்சியசாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் அதிகார சபையின் திருகோணமலைப் பணிப்பாளர் கே.டி.வசந்தன் தெரிவித்தார்.

சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது பொலிஸாரும் இணைந்து செயற்பட்டனர் என்றும்,பதுக்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் திருகோணமலை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் கே.டி வசந்தன் தெரிவித்தார். (எ-இ)

## மருத்துவக் குழுவிலிருந்து விலகிய மருத்துவ நிபுணர்

### அரசின் நடவடிக்கைகளால் ஏற்பட்ட அதிருப்தியே காரணம்!

கொழும்பு, செப்.8



கொரோனா பரவல் கட்டுப்பாடு தொடர்பான மருத்துவக் குழுவில் இருந்து மருத்துவ நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம விலகியுள்ளார்.

இது தொடர்பாக அவர் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு மின்னஞ்சல் மூலம் அறிவித்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. அவர்களுக்கு அனுப்பியுள்ள மின்னஞ்சலில், கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக எடுக்கப்பட்ட சில முடிவுகளுக்கு உடன்படமுடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

தொழில்நுட்பக் குழுவின் அறிவுறுத்தலின்படி நாட்டை மூடுதல் மற்றும் தடுப்பூசி செயன்முறை மேற்கொள்ளப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ள அவர், ஏனைய காரணங்களை அடிப்படையாகக் கொண்டே முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

எதிர்காலப் பேரழிவுகளுக்குப் பொறுப்பேற்க முடியாது என்று குறிப்பிட்டுள்ள அவர், மருத்துவக் குழுவில் இருந்து விலகிக் கொள்கின்றேன் என மின்னஞ்சலில் குறிப்பிட்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஷாத் பதியுதீனை பின்தொடரும் நபர்

### நீதிமன்றின் கவனத்துக்கு

கொழும்பு,செப்.8
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை பின்தொடரும் நபர் தொடர்பில், அரச தரப்புச் சட்டத்தரணியால் நீதி மன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. மலையகச் சிறுமி ஹிஷாலினியின் இறப்புத் தொடர்பிலான வழக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது ரிஷாத் உள்ளிட்ட வழக்கின் சந்தேகநபர்கள் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

மன்றில் விசேட கூற்றை முன்வைத்த பிரதி சொலிசிடர் ஜெனரல் திலீப் பீரிஸ், நீதிமன்ற விசாரணைப் பிரிவில் மர்ம நபர் ஒருவர் அமர்ந்துள்ளார். அவர் கடந்த அனைத்து வழக்கு விசாரணைகளின் போதும் வாதப்பிரதிவாதங்களை குரல் பதிவு செய்து வருகின்றார் என்று முறையிட்டார். குறித்த நபர் தன்னை ஊடகவியலாளர் என்று அடையாளப்படுத்தியே மன்றுக்குள் உள்நுழைந்துள்ளார். அவர் ரிஷாத்துக்கு பக்கத்து ஆசனத்தில் அமர்ந்திருந்தார் என்று சட்டத்தரணி தெரிவித்தார்.

இது தொடர்பில் கவனம் செலுத்திய நீதிவான், குறித்த நபரது ஊடக அடையாள அட்டையின் உண்மைத்தன்மையை ஆராயுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்தார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். (ஒ,4)

# வடக்கில் 2 மணிநேரத்துக்கு ஒருவர் கொரோனாவால் சாவு

**வடக்கு மாகாணத்தில் இந்த மாதத்தின் முதல் 6 நாள்களில் மாத்திரம் 75 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். ஒரு நாளைக்கு சராசரியாக 12 என்ற வீதத்திலும், இரண்டு மணி நேரத்துக்கு ஒருவர் என்ற வீதத்திலும் உயிரிழப்புக்கள் அமைந்துள்ளன.**




அவர்களில் வவுனியா மாவட்டத்தில் 29 பேரும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 27 பேரும் உள்ளடங்குகின்றனர் என்று சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை 11 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 5 பேரும், வவுனியா மாவட்டத்தில் 3 பேரும், முல்லைத்தீவில் 2 பேரும், கிளிநொச்சியில் ஒருவரும் என்று 11 பேர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் 2020 ஆம் ஆண்டு மார்ச் தொடக்கம் நேற்றுமுன்மதினம் வரை வடக்கு மாகாணத்தில் 488 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். (ஒ,26)

# மூன்றாவது டோஸாக மாற்றுத் தடுப்பூசி

### மருத்துவர்கள் பரிந்துரை

கொழும்பு,செப்.8
சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றவர்களில், நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களுக்கு, மூன்றாவது தடுப்பூசியாக பைஸர், அஸ்ராஜெனகா அல்லது மொடர்னா தடுப்பூசிகளை வழங்குவது அவசியம் என்று விசேட மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தடுப்பூசி வழங்குவது தொடர்பில் தீர்மானம் எடுப்பவர்கள் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் நிபுணர்கள் குழு மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் ஆகியவற்றின் அனுமதியுடன் முன்வைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவது அவசியம்.

மருத்துவக் குழுவினரால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை முறையாக செயற்படுத்தாமையே 60 வயதுக்கு மேற்பட்டோர் அதிகளவில் உயிரிழப்பதற்குக் காரணமாகியது.

அதேவேளை 20 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு பைஸர் தடுப்பூசியைச் செலுத்துவது முறையற்றது. இது விஞ்ஞான பூர்வ தரவுகளை மீறும் செயற்பாடு. என்றுள்ளது. (ஒ,4)



# குணமடைந்தவர் வீட்டில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,செப்.8
கொரோனாத் தொற்றால் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நடந்துள்ளது.

குறித்த நபருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டு, மந்திகை மருத்துவமனையில் 10 நாள்கள் சிகிச்சை பெற்று வந்தார்.

பின்னர் அவர் வீட்டில் சுயதனிமைப்படுத்தலில் இருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கைதடி முதியோர் இல்லத்தில் 85 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ,4)

# சத்திரசிகிச்சை நிபுணர் நியமனத்துக்கு இடையூறு

### யாழ். போதனா பணிப்பாளர் மீது மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.8
வடக்கு மாகாணத்துக்கான இரண்டாவது பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணரை நியமிப்பதற்கு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பர்ளரும், சுகாதார சேவைகள் பணிப்பாளரும் தடையாக உள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் வாசன் ரட்ணசிங்கம், இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

மேல் மாகாணத்தில் தற்போது 7 பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர்களும், மத்திய மாகாணத்தில் 2 நிபுணர்களும் உள்ளனர். ஏனைய பிரதேசங்களிலும் அவர்களின் சேவை நடைபெறுகின்றது. வடக்கு மாகாணத்தில் ஒரே ஒரு பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணரே உள்ளார். அதற்காக அந்த பிரதேச மக்களின் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு இன்னுமொரு மருத்துவ நிபுணரைப் பரிந்துரைத்திருந்தது.

அதற்கு பொதுச்சேவை ஆணைக்குழு அனுமதி வழங்கியிருந்தது. யாழ்.போதனா மருத்துவமனைக்கு இரண்டாவது பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணருக்கான வெற்றிடத்தை உருவாக்கி அங்கு இரண்டாவது நிபுணர் ஒருவரின் நியமனத்தை பொதுச்சேவை ஆணைக்குழு உறுதிசெய்திருந்தது. இந்த நியமனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதும் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளரும், சுகாதார சேவைகள் பணிப்பாளரும் இந்த நியமனத்தைத் தடுக்கின்றனர் என்று எங்களுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. விசேட மருத்துவ நிபுணர் ஒருவர் அங்கு செல்ல விருப்பம் தெரிவித்துள்ள போதும் அவருடைய பதவியானது இன்னும் சுகாதார அமைச்சால் உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த நடவடிக்கை தொடர்பாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சருக்குத் தமது முறைப்பாட்டைத் தெரிவிக்கவுள்ளது. என்றார். (எ-இ)

# கொடுப்பனவுகளை வழங்குமாறு கோரி குடும்பநல உத்தியோகத்தர்கள் போராட்டம்

மன்னார், செப். 8
மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் கடமையாற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு, பயணக் கொடுப்பனவு, ஓய்வு நாள் கொடுப்பனவு போன்றவற்றை வழங்கக்கோரி கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு, மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

'தற்போதைய கொரோனா சூழ்நிலையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் உத்தரவின்படி கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளில் பெரும்பங்கு வகிக்கின்றோம். இதற்காக நாங்கள் காலை 7 மணியிலிருந்து போக்குவரத்து தடையான இந்த நேரத்திலும் மாலை 4 மணி வரையும் இரவு 10 மணிவரையும் இந்த சேவையை செய்து வருகிறோம். எமக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு இதுவரை காலமும் வழங்கப்படவில்லை. ஏனைய மாகாணங்களில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற மேலதிக நேர கொடுப்பனவு வடக்கு மாகாணத்தில் மட்டும் வழங்கப்படுவதில்லை. அத்துடன் ஒரு மாதத்தில் 20 நாட்களுக்கு மேலாக வெளிக்கள பயண நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம். அதற்கான பயணக் கொடுப்பனவுகள் கூட வழங்கப்படுவதில்லை. எமது குடும்பநல உத்தியோகத்தர்கள் 8 நபர்களுக்கு மேல் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இந்த நாட்களில் எமக்கு வழங்கப்பட்ட வெளிக்கள உத்தியோகம் உட்பட அனைத்துக் கடமைகளையும் சரியாக நிறைவேற்றி இருக்கின்றோம். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் முழு ஒத்துழைப்போடு நாங்கள் இங்கு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். எனவே எமக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு, பயணக் கொடுப்பனவு, ஓய்வு நாள் விடுமுறை கொடுப்பனவுகளை வழங்குமாறு ஆளுநரிடம் கோருகின்றோம்' என்று குடும்பநல உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். வடக்கு மாகாண ஆளுநருக்கான அவர்களின் மனு, மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது. (ஒ,60,213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார ஊழியர்கள் உயிரிழந்தால் அவர்களது குடும்பத்துக்கு ஊதியம்

## அரசிடம் கோரிக்கை

**கொழும்பு, செப்.8**

**கொரோனாத் தொற்றால் சுகாதார ஊழியர்கள் உயிரிழக்க நேரிட்டால், அவர்களது ஊதியத்தை குடும்பத்தினருக்கு வழங்கவேண்டும் என்று சுகாதார பராமரிப்பு சேவைச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவிக்கையில்,

சுமார் 6 ஆயிரம் சுகாதாரப் பணியாளர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொடிய தொற்றுநோயை எதிர்கொள்ளும் ஒரு முன்வரிசைக் குழுவாக சுகாதார ஊழியர்கள் தங்கள் உயிருக்கு ஆபத்து இருந்த போதிலும், தொடர்ந்து பணியாற்றுகின்றனர்.

தீவிரமான தொற்றுநோய்ப் பாதிப்பால் உயிரிழந்த பொலிஸ் அதிகாரிகளின் குடும்பங்களுக்கு தொடர்ந்து ஊதியத்தை வழங்குவது தொடர்பில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தீர்மானம், சரியான நேரத்தில் எடுக்கப்பட்டது.

எனவே தொற்றுநோயால் உயிரிழக்கும் சுகாதார ஊழியர்களுக்கும் இந்தச் சலுகை வழங்கப்பட வேண்டும்.

சேவையில் இருக்கும் போது கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் சுகாதார ஊழியர்களின் சம்பளத்தை அவர்களின் பதவிக் காலம் நிறைவடையும் வரை, அவர்களது குடும்பங்களுக்கு வழங்கும் வகையில் அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து, நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். -என்றார். (ஒ-4)

# சுயதொழில் முயற்சியாளர்கள் ஒரு லட்சம் பேர் அடையாளம்

கொழும்பு, செப்.8

நாட்டில் சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 10 ஆயிரம் பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராஜாங்க அமைச்சர் மஹிந்த சமரசிங்ஹ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுயதொழில் முயற்சியாளர்களின் தொழில்துறை தொடர்பான அரச நிறுவனங்களின் பரிந்துரைகள் மற்றும் ஆய்வின் அடிப்படையில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சமுர்த்திப் பயனாளிகள், குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை அரசு பெற்றுக் கொடுக்கும். அதேவேளை 500 உற்பத்திக் கிராமங்களை அமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், இந்த வருடத்தின் இறுதிக் காலாண்டில் இரண்டு பில்லியன் ரூபா வருமானத்தை தேசிய பொருளாதாரத்துக்குப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. -என்றார். (ஒ-4)

# 9.34 பில். ரூபா வருமானம் ஈட்டிய சுங்கம்

கொழும்பு, செப்.8.

கடந்த மாதம் 28ஆம் திகதியில் இருந்து கடந்த 3ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் இறக்குமதி வரி வருமானமாக 9.34 பில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் சுங்கத்திணைக்களத்தால் அனுமதியளிக்கப்பட்ட ஏற்றுமதிகளின் பெறுமதி 46.43 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

சுங்கத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் சுதத் டி சில்வா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

நாட்டில் கொவிட் பரவல் அதிகரித்துள்ளதால் சுங்கத்தினரின் கடமைகளில் கணிசமானளவு பாதிப்பு ஏற்பட்டுள்ள போதும் சுங்கத் திணைக்களம் கடுமையான சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றி, தொடர்ந்தும் தமது சேவைகளை முன்னெடுத்து வருகின்றது என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

# மாவட்ட செயலர்களை விடவும் ஆணையாளருக்கு அதிகாரம்!

கொழும்பு, செப்.8

மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கான முழு அதிகாரமும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துக்கு உள்ளது என்று ஜனாதிபதி செயலாளர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கான அதிகாரம், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துக்கு இல்லை என நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி முன்வைத்த கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் ஐந்தாவது சரத்தின் பிரகாரம் இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சட்டத்துக்கு முரணான வகையில் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ள நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்து அதனை நிர்ணயிக்கப்பட்ட விலையில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் செனரத் நிவுன்ஹெல்ல கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தார். (எ-இ)

# உணவுப்பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பில்லை

## அரச தரப்பு தெரிவிப்பு

கொழும்பு, செப்.8


இலங்கையில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் எதுவும் இல்லை என்று நிதி, மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2.8 பில்லியன் அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்திருந்த வெளிநாட்டுக் கையிருப்பானது, தற்போது 3.8 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

எனவே இலங்கையில் உணவுப்பற்றாக் குறை ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் எதுவும் இல்லை. எனினும் அரசு இது தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கொரோனாத் தொற்றுக் காரணமாக சீனி போன்ற பொருள்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள போதிலும், அதில் இருந்து மீள்வதற்கு ஏற்றவகையில் அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. -என்றார். (ஒ-4)

# அசாத் சாலிக்கு எதிரான வழக்கு சட்டமா அதிபரிடம் ஆலோசனை



கொழும்பு, செப்.8

தேசிய ஒற்றுமை முன்னணியின் தலைவரும், மேல் மாகாண முன்னாள் ஆளுநருமான அசாத் சாலிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குத் தொடர்பில், சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறப்படவுள்ளது.

அசாத் சாலிக்கு எதிரான வழக்கு கொழும்பு நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் குற்றச்சாட்டுகளை ஆதரிப்பதற்கு ஆதாரங்கள் இல்லை என்பதால், சந்தேகநபரை விடுவிக்குமாறு, ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன கோரிக்கை விடுத்தார்.

அவரது கோரிக்கையை பரிசீலித்த மேலதிக நீதிவான் புத்திக சிறிராகல, சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரி, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டார்.

குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

# இத்தாலி செல்கிறார் மஹிந்த

கொழும்பு, செப்.8

பிரதமர் மஹிந்த ராஜபக்ச அடுத்த வாரம் இத்தாலி செல்லவுள்ளார்.

இத்தாலி பொலொக்னா பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் மாநாடொன்றில் கலந்துகொள்ள செல்லும் பிரதமருடன், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸும் செல்லவுள்ளார்.

இந்த மாநாட்டின் பின்னர் வத்திக்கானுக்கு செல்லவுள்ள பிரதமர் மஹிந்த, அங்கு புனித பாப்பரசரை சந்தித்து ஆசி பெறவுள்ளார். அதேபோல் இலங்கையில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்தும் பிரதமர் அங்கு பாப்பரசருக்கு விளக்கமளிக்கவுள்ளார்.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் முக்கிய பிரதிநிதிகளை பிரதமர் இந்தப் பயணத்தின்போது சந்திப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பயணத்தை முடித்துக்கொண்டு அமைச்சர் பீரிஸ், நேரடியாக அமெரிக்கா சென்று ஐ.நா பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

பிரதமர் மஹிந்த நாடு திரும்பிய பின்னர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அமெரிக்காவுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். (எ-இ)

# தென்மராட்சி சங்கங்களில் சீனி விநியோகம்

சாவகச்சேரி, செப்.8

தென்மராட்சிப் பிரதேசத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நிர்ணயவிலைக்கு சீனி விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிளைக்கடைகள் மற்றும் சாவகச்சேரி சதொச நிலையம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கோப்சிற்றி விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில், அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் மக்கள் சீனியைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர்வோர் பாதுகாப்புக்காக அரசின் தலையீடு அவசியம்

## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

**கொழும்பு, செப்.8**

**தற்போது அத்தியாவசியப் பொருள்கள் மட்டுமல்ல, மருந்துப் பொருள்களும் கொள்ளை விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. எனவே இந்த விவகாரத்தில் நுகர்வோரைப் பாதுகாக்க வேண்டுமெனில் அரசு தலையீடு செய்ய வேண்டியது அவசியம் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனியார் துறையை மாத்திரம் நம்பி பொருளாதாரத்தைப் பாதுகாத்து, மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியாது. அதனால் அத்தியாவசியப் பொருள்களைக் களஞ்சியப்படுத்தும் வேலைத் திட்டத்தை வலுப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி அவசரகாலச் சட்ட ஏற்பாடுகளைக் கொண்டு வந்தது நுகர்வோரைப் பாதுகாக்கும் நோக்கிலாகும்.

அத்தியாவசியப் பொருள்களின் தொகை விவரம் அரசின் கையிருப்பிலும் இருக்கவேண்டும்.

அதன் மூலமே அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்படுவதைத் தடுக்கலாம். அதற்கான வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும். உணவுத் திணைக்களத்தில் அத்தியாவசியப் பொருள்களைக் களஞ்சியப்படுத்தி வந்தால் அனர்த்த நிலைமைகளின் போது மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியும்.

-என்றார். (ஒ-4)

# கொவிட் நடவடிக்கைகளுக்கு 73.2 பில்லியன் ரூபா ஒதுக்கீடு

## பிரேரணை சமர்ப்பிப்பு

கொழும்பு, செப்.8

இலங்கையில் கொரோனாத் தொற்றுத் தொடர்பான நடவடிக்கைகளுக்காக 73.2 பில்லியன் ரூபா நிதி தேவைப்பட்டுள்ளது.

அதற்கான குறை நிரப்புப் பிரேரணை நாடாளுமன்றில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நாடாளுமன்று கூடிய போது, அரச தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, குறை நிரப்புப் பிரேரணையை சபையில் சமர்ப்பித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு உட்பட 24 மாவட்டங்களிலும் தனிமைப்படுத்தல், மக்களுக்கு நிவாரணம், சிகிச்சை மையங்கள், மீனவர்களுக்கு நிவாரணம் மற்றும் தெற்கு நெடுஞ்சாலையை மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வரை நீடித்தல், சூரியவெவ சர்வதேச கிரிக்கெட் மைதானம், அமைச்சரவைக் கட்டடம் புதுப்பித்தல் உள்ளிட்டவற்றுக்கான செலவுகள் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளன. (ஒ-4)

# மூன்றாவது தடுப்பூசி ஆராய்கின்றது அரசு

யாழ்ப்பாணம், செப்.8

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசி அலகு வழங்குவது தொடர்பாக, விரிவான ஆய்வின் பின்னர் முடிவு எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இரு தடுப்பூசி அலகுகளையும் பெற்றுக் கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது (பூஸ்ரர்) அலகை வழங்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பல நாடுகளில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பாக விரிவாக ஆராய்ந்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்று காதார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கை இழக்க நேரிடலாம்

## எதிர்க்கட்சி எதிர்வு கூறல்

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையையும் இழக்க நேரிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வு கூறியுள்ளது. இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவிக்கையில், இலங்கை இந்த வரிச்சலுகையை இழக்கும் நிலைமை ஏற்பட்டால் ஏற்றுமதி வருமானம் அற்றுப் போகும். அதேவேளை சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் ஏனைய ஆடைத் தொழிற்துறையில் தொழில் புரிவோரும் வேலைவாய்ப்புக்களை இழக்க வேண்டிய சூழல் ஏற்படும். இலங்கைக்குக் கிடைக்கப் பெறும் வரிச்சலுகையில் 52 வீதமானவை ஆடைத் தொழிற்றுறை மூலம் கிடைக்கப் பெறுகின்றது. இதன் மூலம் 2020 ஆம் ஆண்டு வருடாந்த வருமானம் 2 பில்லியன் யூரோ வரை உயர்வடைந்தது.

தற்போது மனித உரிமை மீறல்களை அரசு சரி செய்யாவிட்டால், அந்த வரிச்சலுகையும் இல்லாமல் போகக் கூடும்.-என்றார். (ஒ-4)

# பிரான்ஸுக்கான விமான சேவை நவம்பர் ஆரம்பம்

கொழும்பு,செப்.8

சிறிலங்கன் விமான சேவை பிரான்ஸின் பாரிஸ் தலைநகருக்கான விமான சேவையை எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

அதற்கமைவாக 297 இருக்கைகளுடன் கூடிய விமானம், ஒவ்வொரு புதன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் சேவையில் ஈடுபடும் என்று சிறிலங்கன் விமான சேவை அறிவித்துள்ளது. (ஒ-4)

# பொருளாதாரத்தை சீர் செய்வதற்கு சர்வதேச அமைப்புக்களுடன் பேச்சு

கொழும்பு, செப்:8

கொரோனாத் தொற்றால் ஏற்பட்டுள்ள பொருளாதார பாதிப்புக்களைச் சீர்செய்வதற்கு சர்வதேச அமைப்புக்களுடன் இலங்கை பேச்சுக்களை முன்னெடுத்துள்ளது என்று பொருளாதாரம், நுண்நிதி மற்றும் சுயதொழில் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் கொரோனாத் தொற்றால் பொருளாதார மட்டத்தில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் அத்தியாவசிய பொருள் இறக்குமதி மற்றும் சேவை விநியோகத்தில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதற்கு அரசு காரணமல்ல. சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, நாட்டை வழமைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எதிர்க்கட்சியினரின் தொடர்ச்சியான போராட்டங்களும் தொற்றுப் பரவல் தீவிரமடைவதற்கு பிரதான காரணியாக அமைந்தது. தற்போதைய தேசிய அனர்த்த நிலையைக் கருத்தில் கொண்டு எதிர்க்கட்சியினர் பொறுப்புடன் செயற்படவேண்டும். பொருளாதாரப் பாதிப்பு என்பதால் அரச ஊழியர்களது மாதச் சம்பளம் குறைக்கப்படவில்லை. அத்துடன் அரசால் வழங்கப்படும் நலன்புரிக் கொடுப்பனவுகளும் இடைநிறுத்தப் படவில்லை. அனைத்துக் கொடுப்பனவுகளும் உரிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளன. தற்போது பொருளாதாரப் பாதிப்புக்களை சீர் செய்வதற்காக உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட அமைப்புக்களுடன் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. -என்றார். (ஒ-4)

# மின்தகன நிலையம் ஒன்று தென்மராட்சிக்குத் தேவை

## பிரதேச மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி, செப்.8

தென்மராட்சியில் மின்தகன நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா உயிரிழப்புக்கள் அதிகரித்துள்ள நிலையில், மின்தகன நிலையத்தின் தேவை அதிகரித்துள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது கோம்பயன்மணல் இந்து மயானத்தில் மட்டுமே மின்தகன நிலையம் இருக்கின்றது.

அங்கு ஒரு நாளைக்கு 5 உடல்களே தகனம் செய்யப்படுகின்றன. அதனால் சடலங்கள் தேங்கும் நிலைமை காணப்படுகின்றது.

தென்மராட்சி பிரதேச நலன்விரும்பிகள் தென்மராட்சியில் மின்தகன நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெரும் இடவசதியுடன் காணப்படும் சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் மின்தகன நிலையம் அமைக்க முடியும்.

சாவகச்சேரி தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ரவிராஜ் முதற்கட்ட நிதி ஒதுக்கி சாவகச்சேரி நகரசபை ஊடாக இதற்கான பணிகளை ஆரம்பித்திருந்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சாவகச்சேரியில் மின்தகன நிலையம் முதலாவதாக அமைக்கப்படுமென உரையாற்றியிருந்தார்.

அவர் உயிரிழந்த நிலையில் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. அந்த இடம் மயானத்துக்குச் செல்வோரின் இளைப்பாறு மண்டபமாக நகர சபையால் மாற்றப்பட்டது.

இந்தத் திட்டத்தைத் தொடர சம்பந்தப்பட்டவர்களும், புலம் பெயர் பிரதேச நலன்விரும்பிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொற்றாளர்கள் குறைவடைந்தால் ஒட்சிசன் இறக்குமதி நிறுத்தப்படும்

*சுகாதார அமைச்சு தெரிவிப்பு*

**கொழும்பு,செப்.8**



**கொரோனாத் தொற்றாளர்களில், ஒட்சிசன் தேவையுடைவர்களின் எண்ணிக்கை குறைவடையும் பட்சத்தில், வெளிநாடுகளிலிருந்து ஒட்சிசன் இறக்குமதி செய்யப்படுவது நிறுத்தப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவிக்கையில்:-

தற்போது தொற்றாளர் எண்ணிக்கை குறைவடைவதுடன், ஒட்சிசன் தேவையுடைய தொற்றாளர்களின் எண்ணிக்கையும் குறைவடைய வாய்ப்புள்ளது. ஆயினும் ஒட்சிசன் கையிருப்பைப் பேணுவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒட்சிசன் தேவையுடைய தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடையும் பட்சத்தில் வெளிநாடுகளிலிருந்து ஒட்சிசனை இறக்குமதி செய்வதைத் தவிர்த்து, தேசிய உற்பத்தியை முகாமைத்துவம் செய்யக்கூடியதாக இருக்கும்.

அதேவேளை மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான சகல பரிந்துரைகளும் உத்தியோகபூர்வமாக சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்படும்.

தொற்று நிலைமையின் போது வைரஸ் பரவலானது சில சந்தர்ப்பங்களில் குறைவடையும். சில சந்தர்ப்பங்களில் அதிகரிக்கும். எனினும் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதா என்பதை ஸ்திரமாகக் கூற முடியாது - என்றார்.

(ஒ-4)

# சர்வதேசத்துக்காக அரசு புது வியூகம்

கொழும்பு,செப்.8

இலங்கையில் பெரும் உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று சர்வதேசத்துக்கு காண்பிப்பதற்காக அரசு அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்செய்வதற்காக சுற்றுலாப்பயணிகளை மீண்டும் வரவழைக்கின்றனர்.

மறுபுறம் நாட்டில் உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது என்ற நிலைப்பாட்டையே சர்வதேசத்தின் மத்தியில் தோற்றுவிக்கின்றனர்.

உணவுப்பொருள்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்ற நாட்டுக்கு வருகை தர எந்தவொரு வெளிநாட்டவரும் விரும்பமாட்டார்கள் என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

(ஒ-4)

# தொற்று வீதம் அதிகரிப்பதற்கு டெல்டாவின் பிறழ்வே காரணம்

*மருத்துவர் சங்கம் தெரிவிப்பு*

கொழும்பு,செப்.8

இலங்கையில் டெல்டா பிறழ்வு வைரஸ் வேகமாகப் பரவி வருவதால், தொற்றாளர்கள் மற்றும் இறப்புக்களின் வீதம் அதிகரித்துள்ளது என்று இலங்கை மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இறுக்கமான முடக்கம் எதிர்வரும் 18 ஆம் திகதி வரையேனும் நீடிக்கப்பட வேண்டும். அவ்வாறெனில் சிறந்த பிரதிபலனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

புதிதாக உருவாகிய அலையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடையும் சந்தர்ப்பமாக நாம் இதனைக் காண்கின்றோம். போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதன் காரணமாகவே மருத்துவமனைகள் நிரம்பி வழியக்கூடிய நிலைமையைக் கட்டுப்படுத்த முடிந்தது. அதேபோன்று இறப்புக்களின் எண்ணிக்கையும் கணிசமானளவு குறைவடைந்துள்ளது.

இவற்றுக்கிடையில் தடுப்பூசி வழங்கும் பணிகளையும் துரிதமாக முன்னெடுத்துச் செல்வது அத்தியாவசியமானதாகும். முடக்கம் தளர்த்தப்பட்டதன் பின்னரும், சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளை மக்கள் பின்பற்ற வேண்டியது அவசியம் - என்றார்.(ஒ.4)

*இலங்கை என்று கூறி*

# இளம்பெண்ணை மணல் திட்டில் இறக்கிவிட்டு ஓடிய மீனவர்கள்

***நால்வரை கைது செய்தது தமிழக பொலிஸ்***

மன்னார், செப்.8



முல்லைத்தீவைச் சேர்ந்த பெண் ஒருவரை இலங்கை க்கு அழைத்துச் செல்வதாகக் கூறி ஏமாற்றிய நால்வர் தமிழக மரைன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பெண் என்று தெரிவிக்கப்படுகின்றது. மீட்கப்பட்ட பெண் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், தற்போது அவரை அழைத்துச் சென்றவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரம், தனுஷ்கோடியில் இருந்து நேற்றுமுன்தினம் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள், தனுஷ்கோடி முதலாம் மணல் திட்டில் பெண் ஒருவர் தனித்து நிற்பதை அவதானித்து, தமிழக மரைன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

அங்கு சென்று பெண்ணை மீட்ட பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், அந்தப் பெண் முல்லைத்தீவு முள்ளியவளையைச் சேர்ந்தவர் என்று தெரியவந்தது.

அவர் 2018ஆம் ஆண்டு சென்னை விமான நிலையம் ஊடாகத் தமிழகம் சென்றிருந்தார் என்றும், விசாக் காலம் முடிந்த பின்னரும், வளசரவாக்கத்தில் உள்ள தனது உறவினர் வீட்டில் தங்கியிருந்தார் என்றும் தெரியவந்துள்ளது.

தற்போது அவரது தந்தைக்கு உடல் நிலை சரியில்லாததால் கடல் மூலம் சட்டவிரோதமாக இலங்கை செல்ல முயன்றுள்ளார்.

கடந்த 4ஆம் திகதி இராமேஸ்வரத்துக்குச் சென்ற அந்தப் பெண், தனுஷ்கோடியைச் சேர்ந்த மீனவர் ஒருவரிடம் இலங்கை செல்வதற்காக 30 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளார்.

சனிக்கிழமை மாலை பாம்பன், சின்னப்பாலம் கடற்கரையில் அவரை ஏற்றிய அந்த மீனவர், கடலில் நீண்ட நேரம் சுற்றிவிட்டு, நள்ளிரவு 12 மணியளவில் இலங்கை வந்துவிட்டது என்று கூறி, மணல் திட்டில் இறக்கிவிட்டுச் சென்றுள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

பெண்ணிடம் பணம் வாங்கிய மீனவர் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-இ)

# தொற்று அறிகுறியை மறைத்தால் ஆபத்து!

*சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை*

கொரோனாத் தொற்று அறிகுறிகள் இருப்போர் அவற்றை மறைத்து, ஏனையோருக்கு தொற்று ஏற்படும் விதமாகச் செயற்படுவது தண்டனைக்குரிய குற்றம். இது தொடர்பில் பல தடவைகள் அறிவுறுத்தியுள்ளபோதும், சிலர் கருத்தில் எடுக்காது செயற்படுகின்றனர். இவ்வாறு சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தொற்று அறிகுறிகள் உள்ளவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு, அவர்களின் வீடுகளுக்கு இராணுவ, பொலிஸ் உத்தியோகத்தர்கள் சகிதம் சென்று அன்டிஜென் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொற்று உறுதி செய்யப்படுபவர்கள் இடைத்தங்கல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள்.

தாமாக முன்வந்து பரிசோதனைகளை மேற்கொள்பவர்களில் தொற்று உறுதி செய்யப்படுபவர்கள் வீட்டில் தனிமைப்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் என்றும் சுகாதாரப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

(எ-159)

# அரசியல் பழிவாங்கல்களால் அனுமதிப்பத்திரம் கிடப்பில்

*புதுப்பித்து வழங்குமாறு நீதிமன்று உத்தரவு*

கொழும்பு,செப்.8

அரசியல்வாதிகளின் பழிவாங்கல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த அனுமதிப்பத்திரத்தை உடன் புதுப்பித்து வழங்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மது விற்பனை நிலைய உரிமையாளர்கள் இருவர் தாக்கல் செய்த எழுத்தாணை கோரும் மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சோபித ராஜகருணாவின் இணக்கப்பாட்டுடன், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி தம்மிக கனேபொல இந்தத் தீர்ப்பை அறிவித்தார். களனிப் பகுதியைச் சேர்ந்த கே.டி.டி. சில்வா மற்றும் கே.டி. பிரியதர்ஷன ஆகியோர் தாக்கல் செய்த ரிட் மனுக்களை விசாரணை செய்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட சிலர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டிருந்தனர்.

மனுதாரர்கள் பல பிரதேசங்களில் மது விற்பனை நிலையங்களை நடத்தி வரும் வர்த்தகர்களாவர்.

தமது மதுபான விற்பனை நிலையங்களின் அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்காமை தொடர்பில் மனுதாரர்கள் மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

மதுபானசாலை அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பித்து, புதிய அனுமதிப் பத்திரம் வழங்குமாறு எழுத்தாணை பிறப்பிக்க வேண்டும் என்று மனுதாரர்கள் கோரினர்.

மதுவரித் திணைக்களத்தின் பிரதேச அதிகாரிகள் அரசியல்வாதிகளின் இடையூறுகளுக்கு முகம் கொடுத்துள்ளதால், அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பிக்காமையால், மனுதாரர்கள் நீதிமன்றை நாடியுள்ளனர்.

முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் இதற்கு முன்னர் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டு வழக்கை ஆராயும் போது, மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் கடமை தவறியுள்ளார்.

எனவே மனுதாரர்களுக்கு குறித்த அனுமதிப் பத்திரங்களை வழங்க வேண்டும் என்று மதுவரி ஆணையாளர் நயகத்துக்கு மன்று எழுத்தாணை பிறப்பித்தது.

(ஒ - 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## காலம் கடந்த கடிதங்களும் ஒற்றுமைக்கான எத்தனங்களும்!

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 48ஆவது அமர்வில், ஆணையாளரின் வாய்மொழிமூல அறிக்கையில் இலங்கை விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் இணைக்கப்படுவதற்கான விடயங்களை பாதிக்கப்பட்ட தரப்புக்கள் சமர்ப்பிப்பதற்கான காலம் கடந்துள்ள நிலையிலும், தமிழ்த் தேசியக் கட்சிகள் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளன. ஆனால் பல தரப்புக்களாக கன்னை பிரிந்தே மேற்படி கட்சிகளால் அந்த ஆவணங்கள் அனுப்பப்பட்டுள்ளன.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று சொல்லப்படுகின்ற கூட்டிலிருந்து 3 கடிதங்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.
கடந்த மார்ச் மாதம் ஐ.நா. கூட்டத்தொடருக்கு தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் பேச்சுக்கள் நடைபெற்றன. இறுதியில் மூன்று பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து ஓர் ஆவணத்தை அனுப்பினர். அந்த ஒற்றுமையை 6 மாதங்களுக்குக்கூட தாக்குப்பிடிக்கவைக்க முடியவில்லை. இங்கே 'ஒற்றுமை' என்பது வெறும் கோசமாக முன்வைக்கப்பட்டு, தேர்தல் காலங்களில் மக்களை ஏமாற்றி முட்டாளாக்கும் ஆயுதமாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

இந்தச் சிதைவுகளுக்கு எல்லாம் மூலவேர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிதான். அந்தக் கட்சிக்குள்ளும் ஒரு சிலரின் செயற்பாடுகளும் அவர்களின் சர்வாதிகாரத்தனமான நடவடிக்கைகளுமே இந்தப் பிளவுகளை கூர்மையடைச் செய்கின்றன. அவர்கள், தமிழ்த் தேசிய நீக்கம் என்பதை திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாகக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு உடன்பட மறுக்கும் ஒவ்வொரு தரப்பும், தனித்தனி தரப்புக்களாக முகிழ்ந்து கொண்டிருந்தாலும் தங்களுக்கிடையில் பலமான கூட்டை உருவாக்கமுடியவில்லை.

ஆனால் இம்முறை மக்கள் நலன்சார்ந்து, தேர்தல் அரசியலுக்கு புறம்பாக ஒரு கூட்டு அமைந்திருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோவும், புளொட்டும் முதுகெலும்புடன் ஒரு முடிவை எடுத்திருக்கின்றார்கள். இனியும் தமிழ் அரசுக் கட்சியின் ஒரு சிலர் எடுக்கும் முடிவுகளுக்கு தாம் வெறும் இறப்பர் முத்திரை போன்று கையெழுத்து வைத்துக் கொண்டிருக்காமல், தாமே ஓர் ஆவணத்தைத் தயாரித்து கையெழுத்திட்டிருக்கின்றார்கள். அவர்கள் கூட்டமைப்பிலிருந்து ஏற்கனவே திட்டமிட்டு வெளியேற்றப்பட்ட தரப்புக்களுடன் கூட்டாக இணைந்து இதனைச் செயற்படுத்தியிருக்கின்றார்கள்.

அதேவேளை, இந்தக் கூட்டுக்குப் புறம்பாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குள்ளேயிருந்தும் இன்னொரு தரப்பு, ஆணையாளருக்கு கடிதத்தை அனுப்பிவைக்கவுள்ளதாகச் சொல்லப்படுகின்றது விடுதலைப் புலிகள் மீது வலிந்து போர்க்குற்றத்தை சுமத்தும் கடிதத்துக்கு எதிராக, அந்தக் கோரிக்கையுடன் உடன்படாத தரப்பே மற்றொரு கடிதத்தை அனுப்ப உள்ளதாம். தமிழ்த் தேசியப் பரப்பில் இவ்வாறான பிளவுகள் ஆரோக்கியமானவை அல்ல.

ஆனாலும், ஒற்றுமை என்ற கோசத்தைப் பயன்படுத்தி எந்த மக்களுக்காக குரல் கொடுக்கின்றோம் என்று சொல்கின்றார்களோ, அந்த மக்களுக்காக தங்களை தியாகம் செய்தவர்களையே காட்டிக் கொடுப்பதற்கு உடன்படுவதிலும்பார்க்க தனித்து - தனித்துவமாக இருப்பதில் தவறேதும் இல்லை.




# அவசரகாலச் சட்டம் தற்காலிக ஏற்பாடே

**கொழும்பு, செப். 8**



**அவசரகாலச் சட்டத்தை நீண்ட காலத்துக்கு தக்கவைத்துக்கொள்வதற்கு அரசு எதிர்பார்க்கவில்லை. அதேபோல கருத்துச் சுதந்திரம், போராட்டம் நடத்தும் சுதந்திரம் என்பனவும் பாதுகாக்கப்படும் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. இதன்போது அரசுக்கு எதிரான போராட்டங்களை ஒடுக்குவதற்கும், ஊடக அடக்குமுறையைக் கையாள்வதற்காகவுமே அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என முன்வைக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,
'ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு, ஆட்சிக்கு வந்த பிறகு நாட்டில் பல போராட்டங்கள் இடம்பெற்றன. கொரோனாத் தொற்று வேகமாகப் பரவிய அண்மைய காலப்பகுதியில்கூட ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இவை தடுக்கப்படவில்லை. எந்தவொரு போராட்டம்மீதும் தண்ணீர்த் தாரைப் பிரயோகமோ அல்லது தடியடித் தாக்குதலோ மேற்கொள்ளப்படவில்லை. போராடும் மற்றும் கருத்துச் சுதந்திரம் எமது ஆட்சியில் தொடர்ந்தும் பாதுகாக்கப்படும்.
மக்களைச் சூறையாடும் வர்த்தகர்கள் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன. இத்தகையவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு தற்போதுள்ள நுகர்வோர் அதிகாரசபைச் சட்டம் பலம்மிக்கதாக இல்லை. அச்சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும், அது நாடாளுமன்றத்துக்கு வந்து நிறைவேறுவதற்கு காலம் எடுக்கலாம். எனவே, அச்சட்டம் பலமடையும்வரையில்தான் அவசரகால ஏற்பாடுகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. மாறாக அவசரகாலச் சட்டத்தை நீண்டகாலம் வைத்துக்கொள்வது அரசின் எதிர்பார்ப்பு அல்ல, - என்றார். (ஒ - 44)

# மீண்டும் ஆளுநராக கப்ரால்?

கொழும்பு, செப். 8



நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் இராஜாங்க அமைச்சர் பதவிகளை இராஜினாமா செய்யவுள்ளார் என அரச உள்ளக தகவல்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. மத்திய வங்கி ஆளுநர் பதவியை மீண்டும் பொறுப்பேற்குமாறு ஆளுந்தரப்பால் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கமையவே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.
இந்நிலையில் இது தொடர்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது எழுப்பப்பட்ட கேள்விக்கு, இன்னும் உத்தியோகபூர்வமாக இது பற்றித் தெரியப்படுத்தப்படவில்லை என அமைச்சரவை இணைப்பேச்சாளரான அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.
அத்துடன், நாடாளுமன்றத்திலும் இது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. எனினும், இதற்கு ஆளுந்தரப்பில் இருந்து உரிய பதில் வழங்கப்படவில்லை. (ஒ - 44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன அணுகுமுறைகளில் சுகாதார நடவடிக்கைகள்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு.செப்.8
இலங்கையில் கொரோனாத் தொற்று தீவிரமடைந்துள்ள சூழலில், மக்களைப் பாதுகாப்பதற்காக நவீன அணுகுமுறைகள் ஊடாக சுகாதாரம் சார் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று
சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.
உலக சுகாதார ஸ்தாபனத்தின் 74 ஆவது தென்கிழக்கு ஆசிய பிராந்திய மாநாட்டில், சூம் தொழில்நுட்பம் ஊடாக இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கொரோனா வைரஸ் தொற்றை தற்சமயம் தடுப்பூசி மூலம் கட்டுப்படுத்த அதிகபட்ச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
டெல்டா வைரஸ் பரவலால், இந்த ஆண்டு அதிக நோயாளிகள் மற்றும் இறப்புகளை இலங்கை அனுபவித்துள்ளன.
மக்கள் தொகையில் 85.87 வீதத்துக்கும் அதிகமானவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசியின் ஒரு டோஸும், 61.94 வீதமானவர்களுக்கு இரண்டு டோஸும் செலுத்தப்பட்டுள் ளன.
கடந்த சில ஆண்டுகளில் உலக சுகாதார நிறுவனத்துடனான கூட்டாண்மை மற்றும் அதன் தொழில்நுட்ப வழிகாட்டுதலின் காரணமாக நாங்கள் பல சுகாதார சாதனைகளைச் செய்துள்ளோம்.
கொரோனாத் தொற்று சுகாதாரத் துறையில் மட்டுமல்ல, நாட்டின் பொருளாதாரத்திலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக நாங்கள் பல முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். நவீன அணுகுமுறைகள் மூலம் அத்தியாவசிய சுகாதார சேவைகளை வழங்க முடிந்துள்ளது.
குறிப்பாக தபால்சேவை மூலம் வீடுகளுக்கு மருந்துகளை வழங்குதல், முடக்கப்பட்ட பகுதிகளில் வெளிப்புற மொபைல் கிளினிக்குகளை மறுசீரமைத்தல், குடும்பக் கட்டுப்பாடு சேவைகளை மறுசீரமைத்தல், மனநல மருந்துகளை விநியோகித்தல் மற்றும் சமூக மட்டத்தில் சேவைகளை வழங்குதல் போன்றவை முன்னெடுக்கப்பட்டுள்ளன.
அத்துடன் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆதரவுடன், டிஜிற்றல் தொழில்நுட்ப பயிற்சித் திட்டங்களும் தொடங்கப்பட்டுள்ளன.
கொவாக்ஸ் திட்டத்தின் மூலம் தடுப்பூசிகள் மற்றும் உயிர்காக்கும் மருத்துவ உபகரணங்களை வழங்க உலக சுகாதார ஸ்தாபனத்தின் இடைவிடாத முயற்சிகளை நாங்கள் பெரிதும் பாராட்டுகிறோம் - என்றார். (ஒ-4)

# மரண அறிவித்தல்

மலர்வு 10 . 06 . 1950



மறைவு 07 . 09 . 2021


## காசிநாதர் சந்திரமலர்

கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதர் சந்திரமலர் நேற்று (07.09.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் மாப்பாணி தங்கராசா மனோன்மணி (நல்லம்மா) தம்பதியரின் புதல்வியும், அமரர் காசிநாதரின் மனைவியும், ஹேமலதா, லோகேஸ்வரி, பகிரதன் (சுவிஸ்), பிரபாகரன் (அன்னம் உணவகம் உரிமையாளர்), இராமேஸ்வரன் (ஹொலன்ட்), மாலினி, கஸ்தூரி, மாலதி ஆகியோரின் தாயாரும், நேசராசா அமரர், மகேஷானந்தம், புனிதவதி, சிவாஜினி, தர்சினி (ஹொலன்ட்), கலையழகன், அற்புதன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (12.09.2021) ஞாயிற்றுக் கிழமை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் பிற்பகல் 1.00 மணிக்கு இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**கா.பிரபாகரன் - 077 549 3642**
**கு.அற்புதன் - 070 746 5537**

# ஒருபுறம் காணி அபகரிப்பு மறுபுறம் காடழிப்பு

## ஒரே நாடு ஒரே சட்டம் இதுதானா என்று கேள்வி எழுப்புகிறார் சார்ள்ஸ்



கொழும்பு, செப். 8
தமிழ் மக்களிடமிருந்து காணிகள் அபகரிக்கப்படுகின்றன. சிங்கள மக்களுக்கு காணிகள் வழங்குவதற்காக காடுகள் அழிக்கப்படுகின்றன. இதுதான் ஒரே நாடு ஒரே சட்டமா? இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கேள்வி எழுப்பினார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அவசரகாலச் சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பிய அவர், மேலும் கூறியதாவது:
முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று தண்ணிமுறிப்பு குருந்தூர் குளப்பகுதியில் 1920 ஆம் ஆண்டு 170 ஏக்கர் வயல் நிலம் வனவளத் திணைக்களத்துக்கு சொந்தமாக இருந்த நிலையில் 1972 ஆம் ஆண்டு அரச காணிப் பத்திரம் மூலம் தமிழ் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. தற்போது அந்த 170 ஏக்கரும் தமக்குரியதெனக்கூறி வன வளத்திணைக்களம் அதனை அபகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.
1972 ஆம் ஆண்டு முதல் இந்த 170 ஏக்கர் வயல் நிலத்திலும் விவசாயம் செய்து வந்த மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். அந்த மக்களுக்கு அந்த நிலத்தை விட்டால் வேறு நிலங்கள் கிடையாது.எனவே இவ்விடயத்தில் பிரதமர் கவனம் செலுத்த வேண்டும்.
திவிலோயா திட்டத்தின் மூலம் சிங்கள மக்களுக்கு விவசாய நிலங்கள் வழங்குவதற்காக 10 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட காடுகள் அழிக்கப்படுகின்றன. அதேவேளை தமிழ் மக்களின் விவசாயக்காணிகள் அபகரிக்கப்படுகின்றன. இதுதான் ஒரே நாடு ஒரே சட்டமா எனக்கேட்க விரும்புகின்றோம்.
தொல்பொருள் திணைக்களம், வன இலாகாத்திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியன தமிழ் மக்களின் விவசாயக் காணிகளை, பூர்வீகக் காணிகளை எப்படி அப கரிக்கலாம் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றன - என்றார். (ஒ-22)

# சுரண்டலைத் தடுக்க அவசரகாலச் சட்டம்

## நீதியமைச்சர் விளக்கம்



**கொழும்பு, செப்.8**
**எதிர்க்கட்சியினர் தெரிவிப்பது போல் மக்களின் அடிப்படை உரிமைகள் எதனையும் நாம் மீறவில்லை. வியாபாரிகளால் மக்கள் சுரண்டப்படு வதைத் தடுக்கவே அவசரகாலச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
அவசரகாலச் சட்டத்தின் ஊடாக அத்தியாவசிய உணவுப்பொருள்களை மறைத்து வைக்காமல் விநியோகிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
ஜனாதிபதியின் அறிவிப்பின் முதலாவது பகுதியில் பொருள்கள் பதுக்கி வைத்திருந்தால் அவற்றைக் கைப்பற்றி நியாயமான விலைக்கு விற்குமாறு குறிப்பிட ப்பட்டுள்ளது.
இதனால் பாவனையாளர்கள் தான் நன்மை அடைவர். இதனைப் பயன்படுத்தி எவ்வாறு வேறு நோக்கங்களை நிறைவேற்ற முடியும்?
நுகர்வோர் அதிகார சபையின் வாயிலாக இவற்றைச் செய்ய முடியாதா என்று கேட்கின்றனர். ஆனால் உத்தரவாத விலையை நிர்ணயித்து, அதிக விலைக்கு விற்றால் வழக்குத் தொடர மட்டுமே முடியும். நடைமுறையில் இருக்கும் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.
நாட்டின் மொத்த உள்நாட்டு தேவையில் 18 வீதம்தான் இங்கு உற்பத்தியாகின்றது.மீதி 82 வீதம் இறக்குமதி செய்யப்படுகின்றது. அதனை வியாபாரிகள் பயன்படுத்தி மக்களைச் சூறையாடுகின்றனர். இதனைக் கட்டுப்படுத்தவே ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுத்தார் - என்றார். (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுப்பாட்டு விலையைமீறினால்

# அதிக தண்டப்பணத்தை அறவிடும் சட்டவரைவு சபையில் முன்வைப்பு

**கொழும்பு, செப். 8**

**கட்டுப்பாட்டு விலையைமீறும் வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு எதிராக விதிக்கப்படும் தண்டப்பணத்தை அதிகரிப்பதற்கான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை (திருத்தச்) சட்டவரைவு, நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.**

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதன்போதே முதலாம் வாசிப்புக்காக மேற்படி திருத்தச்சட்டவரைவு, சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவால் சபையில் முன்வைக்கப்பட்டது.

இது முக்கியமான விடயமாக விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும் என சபை முதல்வர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, திருத்தச்சட்டத்தின் பிரகாரம் தற்போது அறிவிடப்படும் தண்டப்பணம், எவ்வளவு தொகையால் அதிகரிக்கப்படும் என்பதை விவாதத்தின்போது இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன விவரித்தார்.

'நுகர்வோர் அதிகார சபையால் ஏதேனுமொரு பொருளுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படும் பட்சத்தில், அதனை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக ஆயிரம் ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரையே தண்டப்பணம் அறவிடப்படுகின்றது. புதிய திருத்தத்தின் பிரகாரம் குறித்த தொகை ஒரு லட்சம் முதல் 5 லட்சம்வரை அறிவிடப்படும்.

கட்டுப்பாட்டு விலையை 2ஆவது முறையும் மீறும் வர்த்தகர்களுக்கு 2 ஆயிரம் முதல் 20 ஆயிரம்வரையே தண்டப்பணம் அறிவிடப்படுகின்றது. புதிய திருத்தத்தின் பிரகாரம் அந்தத் தொகை 2 லட்சம் முதல் 10 லட்சம்வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோல நிறுவனங்களுக்கு எதிரான தண்டப்பணமும் அதிகரிக்கப்படும். அதற்கான ஏற்பாடுகளும் உள்ளன. எனவே, அடுத்தவாரத்துக்குள் இச்சட்டவரைவை நிறைவேற்றிம் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். - என்றார்.

(ஒ-44)

## அவசரகாலச் சட்டத்துக்கு எதிரானவன் காலத்தின் தேவையால் ஆதரிக்கிறேன்

### ஆளும் கட்சி எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, செப். 8**

**அவசரகாலச் சட்டத்தை தவறான முறையில் பயன்படுத்த எவருக்கும் ஜனாதிபதி அனுமதியளிக்கக் கூடாது. நான் எப்போதும் அவசரகாலச் சட்டத்துக்கு எதிரானவன்.**

ஆனால் இந்தத் தருணத்தில் அந்தச் சட்டம் அவசியம். இவ்வாறு ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவித்ததாவது:

இந்தக் காலப்பகுதியில் கொரோனா தொடர்பில் நாங்கள் கூறினாலும், இதனையும்விட பாரதூரமான பிரச்சினையாகப் பசியும் உணவுப் பற்றாக்குறையும் போஷாக்குக் குறைப்பாடுமே உள்ளன. 5 வயதுக்குக் குறைந்த 17 சதவீதமான குழந்தைகளுக்கு போஷாக்கு குறைபாடு உள்ளது. அதாவது 5 குழந்தைகளில் ஒரு குழந்தை போஷாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளது. வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள 68 சதவீதமான மக்களின் குழந்தைகள்தான் இவ்வாறு போஷணை குறைப்பாட்டால் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன.

பசி மற்றும் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்து கொள்ள முடியாது வாழும் மக்களுக்கு எதனையாவது செய்ய வேண்டும் முதலாளித்துவவாதிகள் எப்போதும் தமது இலாபத்தைத் தேடவே பார்க்கின்றனர். அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நான் எப்போதும் எதிரானவன். ஆனால், இந்தத் தருணத்தில் அவசரகாலச் சட்டம் அவசியம்.

அவசரகாலச் சட்டத்தை தவறான முறையில் பயன்படுத்த எவருக்கும் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டுமென ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம். எதிர்காலத்தில் எமது விவசாய உற்பத்திகளை அதிகரிக்கவும் இடைத் தரகர்களின் சூறையாடல்களைத் தடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ஒ.22)

## வர்த்தகப் பயங்கரவாதத்தை வேரறுக்க அவசரகாலச் சட்டம்

### புதுவியாக்கியானம் கொடுக்கிறார் வாசுதேவ



கொழும்பு, செப். 8

இலங்கையில் தற்போது இடம்பெறுவது வர்த்தக மாபியா அல்ல, வர்த்தகப் பயங்கரவாதம். இதனை அவசரகாலச் சட்டத்தின் மூலமாகவே தடுக்க முடியும். அதனால்தான் ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தியுள்ளார். இவ்வாறு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவித்ததாவது:

அவசரகாலச் சட்டம் ஜனநாயக எதிர்ப்பு வேலைத்திட்டம் என எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. ஆனால், இது ஜனநாயக விரோத செயற்பாடு அல்ல. மக்களின் அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்கும், மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கும், நெல் ஆலைகளை வைத்துக்கொண்டு அரிசி ஊழலில் ஈடுபடும், ஒரு சில வியாபார மாபியாக்காரர்களின் செயற்பாடுகளைத் தடுத்து மக்களுக்கான நுகர்வுப் பொருள்களைப் பெற்றுக்கொடுக்க எடுக்கும் செயற்பாடு ஒருபோதும் ஜனநாயக விரோத செயற்பாடாகாது. எனவே அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தியமை ஜனநாயகச் செயற்பாடே.

நாட்டின் விலை உயர்வு, அத்தியாவசிய பொருள்களின் பதுக்கல்நிலையைத் தடுக்க சாதாரண சட்டத்தைக் கையாள முடியும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறுகின்றனர். சாதாரண சட்டத்தில் இதனைக் கையாள நடவடிக்கை எடுத்தால் காலம் கடக்கும், நீதிமன்றங்களை நாடி இறுதியாகத் தீர்ப்பு ஒன்று கிடைக்கும் வரைக்கும் மக்கள் அதிக விலையில் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்ய நேரிடும்.

அதேபோல் அவசரகாலச் சட்டமானது அத்தியாவசியப் பொருள்களின் பதுக்கல், ஊழலுக்கு எதிராக மட்டுமே. கையாளப்படும் வேறு எந்தக் காரணத்துக்கும் இது கையாளப்படாது என ஜனாதிபதியே வாக்குறுதி வழங்கியுள்ளார். ஆகவே, எக்காரணம் கொண்டும் இதனைப் பயன்படுத்தி ஜனநாயக அடக்குமுறை முன்னெடுக்கப்படாது.

அதேபோல் அவசரகால நிலைமை நாடாளுமன்றத்துக்கு கட்டுப்பட்டதாகும். ஒருபோதும் நாடாளுமன்ற அதிகாரத்தை மீறிய விதத்தில் அவசரகாலச் சட்டம் கையாளப்படவில்லை.

அத்துடன் மொத்த விற்பனை, உற்பத்திக் கொள்வனவு மற்றும் தொகை பங்கீடு ஆகிய மூன்று விடயங்களையும் அரசு முழுமையாகக் கையாள வேண்டும். அதுவே எதிர்கால நெருக்கடி நிலைமையில் சாதகமான தீர்மானங்களை எடுக்க வசதியாக அமையும். சீனா இதற்கு மிகச்சிறந்த உதாரணம். ஆகவே அதனை முன்னுதாரணமாகக் கொண்டு இலங்கையிலும் தீர்மானம் எடுக்கவேண்டும்.

தற்போது நாட்டில் இடம்பெறும் அத்தியாவசியப் பொருள்களின் பதுக்கலில் ஈடுபடும் நபர்கள் அரசின் நண்பர்கள் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறுகின்றனர். அவர்கள் நண்பர்கள் என்றாலும் அவர்கள் தவறு செய்யும் வேளையில் அவர்களுக்கு எதிராகவும் வாள்வீச ஜனாதிபதி தயாராகியுள்ளார்.

அதேபோல் தற்போது இடம்பெறுவது வர்த்தக மாபியா அல்ல, வர்த்தகப் பயங்கரவாதம். இதனை அவசரகாலச் சட்டத்தின் மூலமாகவே தடுக்க முடியும். அதனாலேயே ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தியுள்ளார் - என்றார். (ஒ-22)



# ஆக்கும்வரை பொறுத்தீர்கள் ஆறும்வரையும் பொறுத்திருங்கள்

### மக்களைக் கோருகிறது பெரமுன

கொழும்பு, செப். 8

அனைத்து சவால்களுக்கு மத்தியிலும் அபிவிருத்திக்கான அடித்தளத்தை அமைத்துவிட்டோம். இன்றுவரை பொறுமையாக இருந்ததுபோல இன்னும் சொற்ப காலத்துக்கு பொறுத்திருக்கும்படி மக்களைக் கேட்டுக்கொள்கின்றேன். தடுப்பூசியளிக்கப்படுவதை நிறைவுக்கு கொண்டு வந்த பின்னர் அபிவிருத்திகளை உங்கள் கிராமத்துக்கே எடுத்துவரும் செயற்பாட்டை நாங்கள் தொடங்கவுள்ளோம். இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் உள்ள தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த ஊடக சந்திப்பிலேயே இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடும், உலகமும் இன்று மிகப்பெரிய நெருக்கடியில் சிக்கியுள்ள சந்தர்ப்பத்திலும் இதனை வைத்துக் கலங்கிய குட்டையில் மீன்பிடிக்கின்ற தரப்பினரும் இருப்பதையிட்டுக் கவலையடைகின்றோம். இந்த நாள்களில் சமூக வலைத்தளங்களில் பார்வையிட்டால், இந்த நாடு பற்றி எந்த அளவுக்குக் [illegible]மாகப் பதிவிடுகின்றார்கள் என்பதை அறியலாம். இந்த அனைத்து முயற்சிகளும் திட்டமிடப்பட்டே நடத்தப்படுகின்றன.

கடந்த வருடங்களாக அழிவுக்கு உட்பட்டிருந்தவற்றை ஆரம்பத்திலிருந்தே மேற்கொள்ள வேண்டியுள்ளது. அடிக்கல் நட்டு அடித்தளம் இடுகின்றபோது அது வெளிப்படையாகத் தெரியாது. கடந்த இரண்டு வருடங்களாக பல்வேறு பிரச்சினைகள், கொவிட் நெருக்கடியைத் தீர்க்க தடுப்பூசி இறக்குமதி என அனைத்து விடயங்களையும் செய்துகொண்டுவருகின்ற நிலையிலேயே அபிவிருத்திகளையும் நடத்திவருகின்றோம்.

உங்களது எதிர்காலத்தைக் குறித்து நம்பிக்கை கொள்ளுங்கள். அவ்வாறு இன்றேல் நீங்களே உங்களது எதிர்காலத்தை அழிக்கப்போகின்றீர்கள் என்பதால் இந்த சூழ்ச்சிகள், சக்திகள் நாட்டையும், அபிவிருத்திகளையும் அழிக்கின்ற தரப்புக்கு இடமளிக்க வேண்டாம் என்று பொதுஜன பெர முன்னணி சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

அனைத்துச் சவால்களுக்கு மத்தியிலும் அபிவிருத்திக்கான அடித்தளத்தை அமைத்துவிட்டோம். இன்றுவரை பொறுமையாக இருந்ததுபோல இன்னும் சொற்ப காலத்திற்கு பொறுத்திருக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். தடுப்பூசியளிக்கப்பட்டு நிறைவுக்கு கொண்டுவந்த பின்னர் அபிவிருத்திகளை உங்கள் கிராமத்துக்கே எடுத்துவரும் செயற்பாட்டை நாங்கள் தொடங்கவுள்ளோம் - என்றார். (ஒ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சட்டங்களால் சிவில் உரிமை மீறல்

## ஜே.வி.பி. தலைவர் அநுர தெரிவிப்பு



கொழும்பு, செப். 8

**புதிய சட்டங்களை உருவாக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி தனது கையில் எடுத்துள்ளதன் ஊடாக, சிவில் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும் என்று ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அவசரகால நிலை உள்ளது என்று காரணம் காட்டி, அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தும் உரிமையை ஜனாதிபதி எடுத்துக் கொண்டார்.

சாதாரணமாக எமது நாட்டில் அரசமைப்பு உள்ளது. அதன்மூலம் உருவாக்கப்பட்ட பல சட்டதிட்டங்கள் உள்ளன. அவை நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டு, திருத்தப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

ஆனால், இந்தச் சகல சட்டங்களையும் தேவையில்லையென்றால் நீக்கவும், தேவையென்றால் செயற்படுத்தவும், புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்தவும் தற்போது ஜனாதிபதி அதிகாரமொன்றைப் பெற்றுள்ளார்.

நீதிமன்ற அனுமதியின்றி எவரையும் கைது செய்யலாம். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாமல் நீண்டகாலம் தடுத்து வைக்கலாம். அதேபோன்று காணி தவிர்த்து ஏதாவதொரு சொத்தை உரிமை கொண்டாடக் கூடிய சட்டத்தையும் செயற்படுத்த முடியும்.

அத்தியாவசிய சேவையாக அறிவிக்க, பொருள்களுக்குக் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க, சுற்றிவளைப்புகளை முன்னெடுக்க ஜனாதிபதிக்கு இவ்வாறான அதிகாரங்கள் தேவையில்லை.

அத்தியாவசியப்பொருள் தொடர்பான பிரச்சினை என்றால் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும்.

அவ்வாறு இருக்கும்போது, அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கட்டுபடுத்தும் நோக்கில் அவசரகாலச் சட்டத்தை பிறப்பிக்கும் அதிகாரத்தை ஏன் எடுத்துக் கொண்டார் என்பதை நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். -என்றார். (ம-4)

## தவிசாளரின் மூக்கை துண்டாடிய பெண்

கொழும்பு, செப். 8

இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக, பிரதேசசபைத் தவிசாளர் ஒருவரின் மூக்கை, பெண்ணொருவர் துண்டாடியுள்ளார்.

தெரணியகல பிரதேசசபையின் தவிசாளரே இவ்வாறு பாதிக்கப்பட்டு தெரணியகல பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரணியகல பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசசபையின் தவிசாளர் தனது வாகனத்தில் தெரணியகல நகரை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது, குறித்த பெண் வாகனத்தை வழிமறித்துள்ளார்.

பின்னர் இருவருக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. சந்தேகநபரான பெண், ஆயுதமொன்றால் தவிசாளர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

அதன்போது அவரின் மூக்கில் காயம் ஏற்பட்டுள்ளது.

தவிசாளரும் அந்தப் பெண்ணின் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். அவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-4)

## நடைபாதை அமைக்கும் திட்டம் ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 8

சர்ச்சைக்குரிய பராக்கிரம சமுத்திர நடைபாதை அமைக்கும் திட்டத்தை இடைநிறுத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

நடைபாதை அமைப்பதற்காக பராக்கிரம சமுத்திரத்துக்குள் தள்ளப்பட்ட பாறைகள் மீண்டும் வெளியே எடுக்கப்படும் என்று நீர்ப்பாசனத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிஹால் சிறிவர்தன தெரிவித்தார்.

அந்தப் பகுதியில் உள்ள பௌத்த மதத் தலைவர்களின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து இந்தத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)



## அமைச்சுக்களின் செலவீனம் அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு

கொழும்பு, செப். 8

அமைச்சுக்களில் குறைக்கக்கூடிய செலவீனங்கள் தொடர்பில் ஆராய்ந்து, அது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு, அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் நிதியமைச்சு அறிவித்துள்ளது.

குறித்த அறிக்கையை, எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு, நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்துள்ளார். குறைக்கக்கூடிய செலவீனங்கள் மற்றும் மீதப்படுத்த எதிர்பார்க்கப்படும் நிதி தொடர்பிலும் திறைசேரிக்கு கூடிய விரைவில் அறிவிக்குமாறு, நிதியமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள நிலைமையின் மத்தியில் அரசு எதிர்பார்க்கும் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. அதனால் செலவீனங்களைக் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், தற்போது ஆரம்பிக்க முடியாத வேலைத்திட்டங்கள், அமைச்சுகளின் புதிய கொள்வனவுகள், கட்டட நிர்மாணங்கள் மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்துவதற்கு அல்லது ஒத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-4)

## 60 வயதானோருக்கு இரண்டாவது டோஸ்



வவுனியா.செப்.8

வவுனியாவில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டது.

சுகாதாரப்பிரினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து, 8 நிலையங்களில் தடுப்பூசியை செலுத்தினர்.

வவுனியாவில் இரண்டாவது டோஸ் செலுத்துவதற்காக 81 ஆயிரம் தடுப்பூசிகள் எடுத்துவரப்பட்டன. அதற்கமைவாக ஒவ்வொரு நிலையங்களிலும் 500 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆர்வத்துடன் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டனர். (ஒ-4-18)

# இரத்தினக் கல் வியாபாரிகளுக்கு ரூபா 25,000 வட்டியில்லாக் கடன்

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

இரத்தினபுரி மாவட்ட மாணிக்கக்கல் வியாபாரிகளுக்கு 25 ஆயிரம் ரூபா வட்டியில்லாக் கடன் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு தெரியப்படுத்துவேன்.

தொற்றுநோய் நிலைமை காரணமாக நாடு முடக்கப்பட்டிருப்பதால் இரத்தினபுரி மாவட்ட சிறிய மாணிக்கக்கல் வியாபாரிகளின் அனைத்துவிதமான வர்த்தக நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. அவர்கள் கஷ்டமான நிலைமைக்கு உள்ளாகியுள்ளதை பெருமளவான வர்த்தகர்கள் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளனர். தமக்காக ஏதாவது சலுகை நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதற்கமைய சிறிய மாணிக்கக்கல் வியாபாரிகளுக்கு 25 ஆயிரம் ரூபா வட்டியில்லாக் கடன் ஒன்றை வழங்குவது பொருத்தமானது எனக் கருதி, அரசுக்கு யோசனை ஒன்றை முன்வைத்துள்ளேன்.

இந்த யோசனையை இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் மற்றும் சிறைச்சாலைகள் முகாமைத்துவம், சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவிடம் சமர்ப்பித்துள்ளேன். இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலே, இந்தப் பிரேரணையை முன்வைத்திருக்கின்றேன்.

நியாயமான பதில் விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன். -என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செப்ரெம்பர் 17இல் லொஸ்லியாவின் 'ப்ரெண்ட்ஷிப்'

ஜான் பால்ராஜ் மற்றும் ஷாம் சூர்யா இணைந்து இயக்கி உள்ள படம் 'ப்ரெண்ட்ஷிப்'. இப்படத்தின் மூலம் கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங் ஹீரோவாக அறிமுகமாகிறார். இதில் அவருக்கு ஜோடியாக பிக்பாஸ் பிரபலம் லாஸ்லியா நடித்துள்ளார். அவர் ஹீரோயினாக நடிக்கும் முதல் படம் இதுவாகும்.

மேலும் அர்ஜுன், காமெடி நடிகர் சதீஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்கள்.

உதயகுமார் இசையமைத்துள்ள இப்படத்துக்கு சாந்தகுமார் ஒளிப்பதிவு செய்துள்ளார். தமிழில் உருவாகி உள்ள இப்படத்தை இந்தி, பஞ்சாபி, தெலுங்கு போன்ற மொழிகளிலும் டப்பிங் செய்து வெளியிட உள்ளனர்.

இந்நிலையில், 'ப்ரெண்ட்ஷிப்' படத்தின் ரிலீஸ் திகதியை படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளனர். அதன்படி இப்படம் வருகிற செப்ரெம்பர் 17ஆம் திகதி திரைய ரங்குகளில் வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




A.P.Perumal@


மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட பணம் மனிதனையே அடிமையாக்கியது தான் வரலாற்றுச் சோகம்.

## காலம் மாறிப் போச்சு....

### மணமகன் தேவை

கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட கணினித் துறையில் வேலை பார்க்கும் 32 வயது நிரம்பிய அழகிய "அஸ்ட்ராசெனிக்கா" தடுப்பூசி போட்ட மணமகளுக்கு அதே வகையான அல்லது "சினோபாம்" தவிர்ந்த ஏனைய தடுப்பூசி போட்ட தகுந்த தொழிலும் நற்குணமுமுள்ள வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். இந்துக்களும் கிறிஸ்தவர்களும் விரும்பப்படுவர். Tel 00947[redacted]



## பலமானது நம்பிக்கை

ஒருவன் மலை உச்சியில் இருந்த இயற்கை அழகை ரசித்துக்கொண்டிருந்தான். திடீரென்று கால் தவறி அதல பாதாளத்தில் விழுந்தபோது, தற்செயலாக பாறையின் விளிம்பில் நீட்டிக்கொண்டிருந்த ஒரு வேரைப் பற்றிக்கொண்டான். பிடி தளர்ந்தால் கீழே விழுந்து உயிர் போகும் அபாயம்! அவன் இதுவரை கடவுளை நம்பியதில்லை. மரண பயத்தில் திடீர் கடவுள் நம்பிக்கை வந்தது. கடவுளை நினைத்து, நீ தான் காப்பாற்றவேண்டும் என்று வேண்டினான். அப்போது வானத்திலிருந்து ஓர் அசரீரி!

**அசரீரி :** 'நீ என்னை நம்ப மாட்டாய்!.

மனிதன் : கடவுளே, என்னைக் கை விட்டு விடாதே. நிச்சயம் நம்புகிறேன்.

**அசரீரி :** எனக்கு நம்பிக்கை இல்லை.

**மனிதன் :** கடவுளே, உன் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நீ தான் காப்பாற்ற வேண்டும்.

**அசரீரி :** சரி, உன்னைக் காப்பாற்றுகிறேன். முதலில் நீ பிடித்திருக்கும் வேரை விட்டுவிடு.

**மனிதன் :** வேரை விட்டுவிட்டால் கீழே விழுந்து இறந்து விடுவேனே?

அதன் பின் வானத்தில் குரல் எதுவும் கேட்கவில்லை. நம் மீது நாம் வைக்கும் நம்பிக்கை முக்கியம் என்றால், அதை விட முக்கியம், நாம் மற்றவர்கள் மீது வைக்கும் நம்பிக்கை. அந்த நம்பிக்கை கண்மூடித்தனமான நம்பிக்கையாக இருக்கக்கூடாது. ஒருவர்மீது நாம் நம்பிக்கை வைப்பதற்கு முன், அவரைப்பற்றி முழு விவரங்களையும் ஆராய வேண்டும். எமது நம்பிக்கைக்கு அவர் தகுதியானவர்தானா என்பதைக் கண்டறியவேண்டும்.






## இன்றைய நாள்

**மேடம்**: நல்ல செய்தி தேடி வரும். பொறுமை கூடுவதால் சாதிப்பீர்கள். மற்றவர்களிடம் பணிவாகப் பேசி நன்மை பெறுவீர்கள். முன்னேற்றத்துக்கு எடுத்த முயற்சி ஓரளவுதான் வெற்றி பெறும்.

**இடபம்**: புதிய விஷயம் ஒன்றைக் கற்று அதைச் செயல்படுத்துவீர்கள். பணவரவு தாமதமாகிப் பிறகு கிடைக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும். கவலைகளில் இருந்து விடுபட்டு நிம்மதி அடைவீர்கள்.

**மிதுனம்**: மற்றவர்களின் பாராட்டால் மகிழ்ச்சி உண்டாகும். கொடுத்த பொருள் பத்திரமாகத் திரும்பக் கிடைக்கும். குடும்பத்தில் ஒருவருக்கு உடல்நிலையில் ஏற்பட்ட பாதிப்பு சரியாகும்..

**கடகம்**: எதிலும் கவனமாகச் செயற்பட வேண்டிய நாள். நன்றி மறந்த சொந்த பந்தங்களை நினைத்து வருந்தாதீர்கள். ஆடம்பரச் செலவுகளால் சிறிதளவு பண நெருக்கடி உண்டாகும்.

**சிம்மம்**:புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி பெறும். அலுவலகத்தில் வளைந்து கொடுத்து சென்று வெல்வீர்கள். குழந்தைகளின் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** சுபநிகழ்ச்சி நிறைவேறுவதில் சற்று மந்தநிலை ஏற்படும். சமீபமாக ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலை மாறி நிம்மதி வரும். ஒருசிலருக்கு இட மாற்றம் மகிழ்ச்சியையும், லாபத்தையும் தரும்.

**துலாம்:** திட்டமிட்ட விஷயம் திசை மாறிச்சென்றாலும் நல்ல பலன் உண்டு. கடமையில் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டு வெல்வீர்கள். எதிரிகள் மனம் மாறி நண்பர்களாவர்.

**விருச்சிகம்:** எதிர்கால வாழ்வுக்கு உதவும் திட்டம் ஒன்று நிறைவேறும். செய்ய நினைத்த செயல் ஒன்றை நல்லபடியாக முடிப்பீர்கள். பிரச்சினை ஒன்று இன்று நல்ல முடிவிற்கு வரும்.

**தனுசு:** குழந்தைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் இருக்கும். தள்ளிப்போட்ட வேலைகளை விரைந்து முடிக்க முயலுங்கள். பணியிடத்தில் வரவேற்பு அதிகரிக்கும்.

**மகரம்:** வெற்றி வாய்ப்புக் கூடும். குடும்பத்தினருடன் அனுசரித்து செல்லவும். கடன்களை முடிப்பதில் சுணக்கம் வேண்டாம். பேச்சிலும் செயலிலும் மிகுந்த கவனம் தேவை.

**கும்பம்:**நண்பர்களுக்கு உங்கள் உதவி தேவைப்படும். பெரியோருக்கு உதவி செய்து அவர்களின் ஆசியைப் பெறுவீர்கள்.கட்டுப்பாடாக இருக்க வேண்டும்.

**மீனம்:** மகிழ்ச்சி தரும் செலவு என்றாலும் கட்டுப்படுத்தப் பாருங்கள். தன்னம்பிக்கை இழக்கச் செய்பவரிடமிருந்து விலகுங்கள். உங்களின் பணிக்கு பாராட்டு கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 20 . 09 . 1943 |  | 07 . 09 . 2021 |

## தவமலர் சித்திரவடிவேலு

சந்நிதி வீதி, தம்பாலை அச்சுவேலியைச் சேர்ந்த தவமலர் சித்திரவடிவேலு அவர்கள் நேற்று (07.09.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு இராசம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற முன்னாள் பேராசிரியர் கலாநிதி சித்திரவடிவேலு அவர்களின் அன்பு மனைவியும், கருணசீலன் (லண்டன்), தர்மசீலன் (லண்டன்), துஷ்யந்தி (லண்டன்) ஆகியோரின் தாயாரும், கௌசலா (லண்டன்) கங்கேஸ்வரி (லண்டன்), யோகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் மாமியும், கபிலன், கமலிக்கா, கவிதா, தனுஜா, யதுசன், பவித்திரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2021) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தம்பாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சி.கருணசீலன் - மகன் : 00447771708349**
**சி.தர்மசீலன் - மகன் : 0044793139276**
**செ.யோகேஸ்வரன் மருமகன் : 00447404971884**
**யோ.துஷ்யந்தி மகள் : 0094212058307**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## கோவிந்தபிள்ளை இராமச்சந்திரன்

**(ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், யாழ் மத்திய பேருந்து நிலையம், இலங்கை போக்குவரத்துச் சபை)**

பொன்னாலையை பிறப்பிடமாகவும் மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியை வதிவிடமாகவும் கொண்ட கோவிந்தபிள்ளை இராமச்சந்திரன் (ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், யாழ் மத்திய பேருந்து நிலையம், இலங்கை போக்குவரத்துச் சபை) அவர்கள் கடந்த (06.09.2021) அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தபிள்ளை-தெய்வானை தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னத்தங்கம் ஆகியோரின் மருமகனும், தேவமணியின் பாசமிகு கணவரும், அமரர் ராஜேஸ்வரி, சிவனேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், வைத்திய கலாநிதி சுஜித்தா அகிலன் (தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை), வைத்திய கலாநிதி யசித்தா அன்பழகன் (குயின் எலிசபெத் வைத்தியசாலை, கிங்ஸ்லின், பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அகிலன் (பொறியியலாளர், உரிமையாளர்-வசந்தம் பார்மசி), அன்பழகன் (சிரேஷ்ட விரிவுரையாளர் CLC) ஆகியோரின் மாமனாரும், சஞ்சனா (UK), அவிரோன், பிரனேஷ் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2021) கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 910 3594**
**076 588 7252**
**447727177375**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# பருத்தித்துறையில் நேற்று மூன்று கொரோனாச் சாவு

யாழ்ப்பாணம், செப். 8

பருத்தித்துறையில் நேற்று மூவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தனர்.

மந்திகை கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்றுவந்த திக்கத்தைச் சேர்ந்த 88 வயதுடைய ஆணும், அல்வாயைச் சேர்ந்த 79 வயது ஆணும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தனர். அதேபோல் பருத்தித்துறையில் 81 வயதுடைய பெண் வீட்டில் இறந்த நிலையில் மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம26)

# சுகவீனமுற்ற நபர் திடீரென உயிரிழப்பு

கொடிகாமம், செப். 8

சுகவீனமுற்றிருந்த குடும்பத்தலைவர் நேற்று உயிரிழந்தார். கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய அவர், நேற்றுத் திடீரென நோய்வாய்ப்பட்டு உயிரிழந்தார்.

மந்துவில் மேற்கு கொடிகாமம் பகுதியில் நேற்றுக்காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. மந்துவில் மேற்கு கொடிகாமம் கேலத்தம்மன் கோவிலடியைச் சேர்ந்த 38 வயதுடைய சிறீரஞ்சன் சிறிகுமார் என்பவரே மரணமடைந்தவராவார். அவருக்கு உடனடியாக அன்டிஜன் சோதனை முன்னெடுக்கப்பட்டது. அதில் கொரோனாத் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம-159)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியை **திருமதி தவலாங்கி றூபன்** அவர்களின் அன்புத் தாயார்
**சுப்பிரமணியம் பரமேஸ்வரி**
அவர்கள் கடந்த (30.08.2021) அன்று காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**ஆசிரியர் வட்டம்**
**யாழ்ப்பாண மத்திய கல்லூரி**

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியர் **திரு. கேதீஸ்வரன்** அவர்களின் அன்புத் தாயார்
**பத்திநாதர் பூர்வீகராணி**
அவர்கள் கடந்த (05.09.2021) அன்று காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**ஆசிரியர் வட்டம்**
**யாழ்ப்பாண மத்திய கல்லூரி**

# மரண அறிவித்தல்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 10 . 04 . 1949 |  | 07 . 09 . 2021 |

## திருமதி தேவதிரவியம் றீற்றா

**(இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர்)**

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவதிரவியம் றீற்றா அவர்கள் நேற்று (07.09.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியாம்பிள்ளை மரியம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான டேவிற் பாக்கியம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தேவதிரவியத்தின் அன்பு மனைவியும், மரியநாயகம் மேரிறோசா காலஞ்சென்ற யேசுதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மேரி சாமினி (ஆசிரியர் யா/புற்றளை ம.வி), டெய்சி ஜெயந்தினி (ஆசிரியர், கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை), சுலோஜினி ( தாதிய உத்தியோகத்தர், யாழ்-போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அன்ரனி (சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர், பிரதேச செயலகம், கரவெட்டி), M.அரியம் றொபேட் (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், பிரதிப் பிரதம செயலகம், வடமாகாணம்), ச.திலீபன் (தாதிய உத்தியோகத்தர், யாழ்-போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமியாரும், றேமிகன், சிரோன், லஜிகன், அன்றியா, சமீறா, சபோத் ஆகியோரின் பிரிமான பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.09.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 02 . 1946



மறைவு 06 . 09 . 2021

## திருமதி நாகேஸ்வரி நடராஜா

**(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் ஆட்பதிவு திணைக்களம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)**

சாவகச்சேரி கல்லடி லேனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி நடராஜா கடந்த (06.09.2021) திங்கட்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை அம்மாக்குட்டி தம்பதியரின் பாசமிகு மகளும், திரு.பொ.நடராஜா (ஓய்வுபெற்ற தபாலதிபர், தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியை இந்திராதேவி, தவமணிதேவி, நகுலாதேவி, குணமணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திருமதி சேதுப்பிள்ளை, திரு.செல்லப்பா, திரு. கந்தசாமி, திருமதி தங்கம்மா ஆகியோரின் அன்புமைத்துனியும், நிமலன், சிவபாலன், கமலினி, ஜெயந்தன் ஆகியோரின் சிறிய தாயாரும், தேனுஜாவின் ஆசைப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.09.2021 அன்று நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## ஐயம்பிள்ளை பரமேஸ்வரர்

**(ஓய்வுநிலை உப பொலீஸ் பரிசோதகர்)**

சாவகச்சேரி கல்லடி றோட்டை பிறப்பிடமாகவும், கண்டி வீதி, சங்கத்தானையை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற ஐயம்பிள்ளை தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகன் ஐயம்பிள்ளை பரமேஸ்வரர் நேற்று (07.09.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தவமணிதேவியின் அன்புக் கணவரும், கஜன் (ஜேர்மனி), அனுசியா (சுவிஸ்), சர்மிலா (அவுஸ்திரேலியா), தனரஞ்சன் (இலங்கை IT விரிவுரையாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மைதிலி (ஜேர்மனி), ரூபன் (சுவிஸ்), யோகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), வசந்தமலர் (ஆசிரியை, காரைநகர் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், ராம், ரம்மியா, லலுஜன், நிலோஜன், கௌசி, கௌதம், அஜந்தா, காவியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மகன் - தனரஞ்சன்**
**மருமகள் - வசந்தமலர்**
**(உடுவில்)**

**தொ.பே.இல: 077 995 4145**
**077 968 9043**

# மரண அறிவித்தல்

மண்ணில் 10 . 04 . 1949



மறைவு 07 . 09 . 2021

## அமரர் வேலுப்பிள்ளை கிருஷ்ணசாமி

இணுவில் தெற்கு பாலாவோடையை பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கிருஷ்ணசாமி (06.09.202) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலகுசென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னம்மா தம்பதி யரின் மகனும் செல்லையா கனகம்மா தம்பதியரின் மருமகனும், நீலசு லோசனா (தேவி) அவர்களின் அன்புக் கணவரும், உதயகுமார் (அம்பிகாபதி பான்சி குட்ஸ், யாழ்ப்பாணம்), சிவகுமார் (அம்பிகை பான்சி யாழ்ப்பாணம்-இனுவில்), சோமாஸ் கந்தமூர்த்தி அம்பிகாபதி பான்சி குட்ஸ்-யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாளினி ஶ்ரீராகினி, வசுமதி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சண்முகராசா, தங்கச்சியம்மா, காலஞ்சென்ற அழகசுந்தரம், பொற்கொடி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விமலாதேவி, சிதம்பரநாதன், மனோன்மணி, கதிரவேலு ஆகியோரின் அன்பு மைத்துனரும் மகாலட் சுமி, கிருசாந், யனுசாந், வரலட்சுமி, ஜனார்த்தனன், ரவிதன், பகீரதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 774 0807**
**077 286 9996**
**077 247 8705**

**இணுவில் மேற்கு,**
**இணுவில்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 09 . 1974



மறைவு 02 . 09 . 2021

## அமரர் தாயுமானவர் மதியழகன்

**(மதி லைற்ஸ் உரிமையாளர்)**

பிரான்பற்று பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாயுமானவர் மதியழகன் அவர்கள் கடந்த (02.09.2021) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் தாயுமானவர் மற்றும் யோகேஸ்வரியின் அன்புப் புதல்வனும், சோதிராசா ஆரியமாலாவின் பாசமிகு மருமகனும், றஜீபன், றஜித்தா, காலஞ்சென்ற றஜிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷாந்தினி, றஜீதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கோபிகா, டிஷானா, திஷார்னிகா ஆகியோரின் அன்புப் பேரனும், அன்பரசி (லண்டன்), அன்பழகன் (பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவு சங்க சாரதி), மதியரசி (லண்டன்), நிதியழகன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கணேஸ் (லண்டன்), சசிகலா, பவளராசா (லண்டன்), தர்ஷனா (லண்டன்), பரமசிவம், கிருஷ்ணலிங்கம் (லிங்கம்-அவுஸ்திரேலியா), பத்மநாதன் (அமெரிக்கா), சந்திரா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான துரைராசா, நடராசா, அழகரத்தினம் மற்றும் இராசரத்தினம் (மங்களா ஸ்ரோர்ஸ்- பண்டத்தரிப்பு) ஆகியோரின் பெறா மகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2021) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சண்டிலிப்பாய் வீதி,**
**பண்டத்தரிப்பு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 18 . 03 . 1965



மறைவு 04 . 09 . 2021

**சோமதேவக்குருக்கள் - ஜெயந்தி**

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில் பிரதம குரு காலஞ்சென்ற சாம்ப சதாசிவக்குருக்களின் அன்பு மருமகள் திருமதி சோமதேவக்குருக்கள் ஜெயந்தி அவர்கள் இறைபதம் சேர்ந்த செய்தி அறிந்து எம்மனம் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை
ஸ்ரீ அரசகேசரி பிள்ளையார் கோவில்
நீர்வேலி.

# மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 12 . 1944



இறப்பு 06 . 09 . 2021

## திருமதி சறோஜா நடராஜா

காரைநகர் வலந்தலையை பிறப்பிடமாகவும் கட்டுநாயக்கா, நீர் கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சறோஜா நடராஜா அவர்கள் 06.09.2021 திங்கட்கிழமை அன்று நீர் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (S.P.S) தமயந்தி தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராசையா இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசையா நடராஜாவின் (ஓய்வு பெற்ற விமானப்படை உத்தியோகத்தர்) ஆருயிர் மனைவியும், பிரபாலினியின் பாசமிகு தாயாரும், சிவானந்தத்தின் (நோர்வே) அன்பு மாமியாரும், ஆர்த்திகா, அருண்ராஜா, பிரதீபா, பிரவீன்ராஜா ஆகியோரின் பேர்த்தியும், அரிகரன் (கனடா), காலஞ்சென்ற கிருபாகரன் (ஜயா), தனலட் சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
சிவானந்தன் (நோர்வே) +4791159628
பிரபாலினி (நோர்வே) +4741208078
அரிகரன் (கனடா) +19057945885
தனலட்சுமி(பிரான்ஸ்) +33651290257
பிரதாபன் (இலங்கை ) +94779733820
நிரோஜன் (இலங்கை ) +94773630348

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## திரு.சங்கரன் ஹரிகரன்

**(Director SUBAS Tourist Hotal Jaffna)**

யாழ்ப்பாணம் சுபாஸ் சுற்றுலா விடுதி உரிமையாளர் திரு சங்கரன் ஹரிகரன் அவர்கள் கடந்த (01.09:2021) அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயப்பன் சுபாஸ் சங்கரன் லக்சுமி அம்மாள் தம்பதிகளின் அன்பு மகனும், மாலினியின் அன்புக் கணவரும், அன்ஜீளா (UK), அனிலா ஆகியோரின் அன்புத் தந்தையும், நிமலாகரன், காலஞ்சென்ற மனோகரன், திவாகரன் (UK) கஜாகரன், தயாகரன் (UK), சீலாதேவி சுதாகரன் (USA) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் கொழும்பில் நடை பெற்றது. இந்த தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**


# வேலையாள் (ஆண்) தேவை

வயோதிப ஆண் ஒருவரை வீட்டில் தங்கி நின்று பராமரிப்பதற்கு ஆண் வேலையாள் தேவை. (நாவலர் வீதி) தொடர்பு: **077 521 7750**

# திருமண சேவை

எம்மிடம் வெளிநாட்டு, உள்நாட்டு மண மகன், மணமகள் உள்ளனர். பொருத்த மானவர்கள் தொடர்பு கொள்ளவும். கணினி மூலமாக உங்கள் பலன் (40 வருட) பார்த்து புத்தகமாக பெறமுடியும்.

**kpthirumanam.com**
**0740891995, 077 0050 344**


# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 01 . 1962



மறைவு 06 . 09 . 2021

## திருமதி சந்தனலிங்கம் நவறஞ்சனி

கோப்பாய் வடக்கை வதிவிடமாக கொண்ட திருமதி சந்தனலிங்கம் நவறஞ்சனி கடந்த (06.09.2021) திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை சந்தனலிங்கத்தின் அன்பு மனைவியும், சாந்தபிரதீப், சந்தனப்பிரியா, சந்தனராஜ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மணிமாறன், ஜனனி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜஸ்னவியின் பேர்த்தியும், ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.
076 013 1791 (மகள்)
077 687 3615 (மகன்)

# மரண அறிவித்தல்



## அருட்சகோதரி நிக்கிலஸ் குரூஸ் தி.கு


மன்னார்-வங்காலையைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக் குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி நீக்கிலஸ் குரூஸ் தி.கு நேற்று (07.09.2021) செவ்வாய்க் கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிப் பயணத் திருப்பலி இன்று (08.09. 2021) புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். பின்னர் அன்னாரின் பூதவுடல் இளவாலை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்
மாகாணத் தலைவி,
121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

எங்கள் அன்புத் தெய்வத்திற்கு

# ஆண்டுகள் பதினைந்து



அமரர்
**சுப்பிரமணியம் பசுபதி**

தோற்றம் 29.11.1935 — மறைவு 26.08.2006

திதி: துதியை
08.09.2021 புதன்கிழமை

ஆண்டுகள் பதினைந்து ஆனதுவோ அப்பா!
நீங்கள் அருகிருந்தெம் மனம் நிறைந்த
ஆதரவுக்கேங்குகின்றோம்!
வழிகாட்டும் ஒளியாய் - எம் விழியாய்
உங்கள் வார்த்தைகள் எம்மோடு என்றும் வாழும்
வணங்குகின்றோம்.

'பசுபதீயம்'
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

**குடும்பத்தினர்**

## முதலாம் பக்கத் தொடர்ச்சி....

### இரண்டு....

தெரிவிக்கின்றன.

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் வவு னியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த 7 பேர் நேற்றுமுன்தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளனர். வீடுகளில் உயிரிழந்த இருவருக்கு, மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களுக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த ஞாயிற்றுக்கி ழமை 10 பேர் கொரோனாத் தொற்றால் வவுனியாவில் உயிரிழந்தனர். இந்த 10 பேரில் 8 பேர் வீடுகளிலும் 2 பேர் சிகிச்சை பயனளிக்காமல் மருத்துவம னையிலும் உயிரிழந்தமை குறிப்பிடத் தக்கது. (ம,எ110)

### நேற்று....

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர் களின் மொத்த எண்ணிக்கை 4 லட்சத்து 71 ஆயிரத்து 859ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற் றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,769 பேர் நேற்று குணமடைந்து வீடுதிரும் பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர் களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 88 ஆயிரத்து 278ஆக உயர்வடைந்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரி வித்துள்ளது. (ம-22)

### லண்டன்,....

லாந்து செல்லவுள்ளதுடன், லண் டனில் நடைபெறும் சுற்றுச்சூழல் மாநாட்டிலும் கலந்துகொள்ளவுள் ளார் எனக் கூறப்படுகின்றது. லண் டன் உச்சி மாநாட்டுக்குப் பின்னர் நேரடியாக அமெரிக்கா செல்லவும் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் வொஷிங்டனில் நடைபெறும் ஐ.நா. பொதுச்சபை அமர்வுகளில் கலந்துகொள்ளவுள்ளார். இதன்படி, ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின் னர் ஐ.நா.பொதுக் கூட்டத்தில் ஜனா திபதி கோத்தபாய ராஜபக்ச கலந்து கொள்ளும் முதல் சந்தர்ப்பமாக இது அமையும். (ம-22)

## கிளிநொச்சியில் நேற்று 3 கொரோனா இறப்புகள்

கிளிநொச்சி, ஏப். 8

கிளிநொச்சியில் நேற்று மூன்று பேர் கொரோனாவால் உயிரிழந்தனர் என்று சுகாதாரத் தரப்பினரின் தக வல்கள் தெரிவிக் கின்றன.

கிளிநொச்சியி லும் அண்மைய நாள்களாக கொரோனா இறப் புக்கள் அதிகரித்து வரும் நிலையில் மேற்படி மூன்று இறப்புக்கள் நேற் றுச் சம்பவித்துள் ளன. அத்துடன் 108 பேருக்கு புதி தாகத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக்....

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 48ஆவது கூட்டத் தொடரில் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பான வாய்மொழி அறிக்கையை முன்வைக்கவுள்ளார். இதற்கு முன்னதாக பாதிக்கப்பட்ட தரப்புக்கள் ஆணையாளருக்கு கடிதம் அனுப்ப முடியும். அதற்கான காலக்கெடுவுக்கு முன்னதாக எந்தவொரு தமிழ்த் தரப்பும் கடிதம் அனுப்பவில்லை.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் என்பன தமிழ்த் தேசியக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ். என்பனவற்றுடன் இணைந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பியிருந்தன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனித்து கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. அந்தக் கடிதத்தை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தயாரித்திருந்தார். அதில் 2011ஆம் ஆண்டு அப்போதைய ஐ.நா. பொதுச் செயலரால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையின் அடிப்படையில், படையினரும் புலிகளும் மேற்கொண்ட போர்க் குற்றத்தை விசாரிக்கக் கோரும் விடயத்தையும் தமது கடிதத்தில் உள்ளடக்கியிருந்தார். அந்தக் கடிதம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கையெழுத்துடன் அனுப்பி வைக்கப்பட்டது என்று தெரியவருகின்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனுடன் உடன்படவில்லை. போர்க்குற்றத்தில் புலிகளையும், இராணுவத்தையும் இணையாகக் குறிப்பிட்டமையால் அதிருப்தியடைந்த அவர்கள் ஒன்றிணைந்து தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற ஓர் அமையத்தை தோற்றுவித்துள்ளதுடன், அந்த அமையத்தின் சார்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்புவதற்குக் கடிதமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

அந்தக் கடிதத்தில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை நிராகரித்தமையும், பொறுப்புக்கூறல் விடயத்தை தட்டிக்கழிக்கும் போக்கு, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் செயற்றிறன் இன்மை, காணாமல் ஆக்கப்பட்டமைக்கு இராணுவமும் காரணம் என்று கூறப்படும் நிலையில் அந்த காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறியும் அலுவலகத்துக்கு இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவரை நியமித்ததன் ஊடாக அதன் நம்பகத்தன்மை கேள்விக்குறியானமை, நீதி அமைச்சர் அலி சப்ரி, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ன காரணத்துக்காக காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்பதை தேட வேண்டாம் என்று ஜனாதிபதி கூறியதாகக் குறிப்பிட்டமை,

அரசு இனப்பரம்பலை மாற்றியமைக்கும் வகையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், அரசியல் கைதிகளின் விடுதலை, பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியில் கலந்துகொண்டோர் அரசின் பாதுகாப்புத் தரப்புக்களால் குடைச்சல் கொடுக்கப்படுகின்றமை என்பனவும் கடிதத்தில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

"தமிழ் அரசுக் கட்சி சார்பில் இவ்வாறான மாற்றுக் கடிதமொன்று தயாரிக்கப்பட்டதா? அதில் கையொப்பமிட்டுள்ளீர்களா?" என்று தொடர்புடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை உதயன் நேற்று இரவு தொடர்புகொண்டு வினவியபோது.

'அவ்வாறாக பிறிதொரு கடிதம் தொடர்பில் சிலர் எம்மோடு கலந்துரையாடினர். ஆயினும் இன்னமும் அதில் நாம் கையொப்பம் இடவில்லை. நாளை (இன்று) வியாழக்கிழமையே இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும்' என்று அவர்கள் தெரிவித்தனர். (அ-ஒ-5)

## செம்மணியில்....

1996ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி யாழ்ப்பாணம் செம்மணி வீதியால் பயணித்துக் கொண்டிருந்த போது, அப்போது அங்கு அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாமில் கிருஷாந்தி இடைமறிக்கப்பட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டார். அவரைக் காணவில்லை என்று தேடிச்சென்ற கிருஷாந்தியின் தாயார் இராசம்மா, அயலவர் கிருபா மூர்த்தி, சகோதரன் பிரணவன் ஆகியோரும் படுகொலை செய்யப்பட்டனர். நீதி விசாரணைகளில் இராணுவத்தினர் இந்தக் குற்றச்செயலில் ஈடுபட்டமை தெரிய வந்தது.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கான அஞ்சலி நிகழ்வே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. (ம -26)

## விபத்தில்....

சைக்கிள் மோதியதில் 28 வயதான இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்த நிலையில், அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த இளைஞனின் சடலம் வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, பி.சி.ஆர். சோதனைக்குரிய மாதிரிகள் பெறப்பட்டு நேற்று சோதனை நடத்தப்பட்டது. இதன்போதே மேற்படி இளைஞனுக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து சடலத்தை எரியூட்டும் செயற்பாட்டை சுகாதாரத் தரப்பினர் முன்னெடுத்துள்ளனர். (ம-110)

## பாடசாலைகளை....

திட்டமும் இல்லை என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் கட்டம் கட்டமாக பாடசாலைகளை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சின் பாடசாலை செயற்பாடுகள் தொடர்பான செயலாளர் எல்.எம்.டி தர்மசேன தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேற்கண்டவாறு கூறினார். பாடசாலைகளை அவசரப்பட்டு திறந்து பாடசாலை கொத்தணி உருவாக இடமளிக்க முடியாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த ஒன்றரை வருடங்களாகக் கொரோனாத் தொற்றுப் பரவலுடன் நாட்டில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன. இதேவேளை, தற்போது 20 முதல் 29 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டு வரும் நிலையில் சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்குவது பற்றி அரசு ஆராய்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

## நாட்டின்....

முடியும் என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இந்த எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வை மேற்கொள்ளும் முதலீட்டாளர்களுக்கு 50 வீதத்தை வழங்கினாலும் 133.5 பில்லியன் டொலர் அரசுக்கு கிடைக்கும் எனவும், அது நாட்டின் மொத்த கடன் தொகையான 47 பில்லியன் டொலரை விட மூன்று மடங்காகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் இரண்டாம் மதிப்பீட்டுக்காக முன்வைக்கப்படவுள்ள கனியவளங்கள் சட்டமூலம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டதுடன் குறித்த சட்டமூலத்துக்கு இந்த அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அனுமதியும் வழங்கப்பட்டது.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் கடற்பரப்பிலுள்ள எரிவாயுவினால் மாத்திரம் நுரைச்சோலை மின் சக்தி நிலையத்தை 120 வருடங்களுக்கு செயற்படுத்த முடியும். அங்கு காணப்படும் எண்ணெயின் மூலம் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை 143 வருடங்களுக்கு செயற்படுத்த முடியும்.

எமது அண்டை நாடான இந்தியா 1940ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு அண்மித்த கடலிலிருந்து எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வில் ஈடுபட்டதுடன், பல்வேறு விடயங்கள் காரணமாக இலங்கையால் அதனை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளது. இது தொடர்பில் நிபுணர்கள் மத்தியில் இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடலை அடுத்து இதற்கான பல கரணங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இலங்கையில் எண்ணெய் ஆய்வுக்காக உலகிலுள்ள பல நிறுவனங்கள் முன்வரவில்லை. இதற்கு முன்னர் இது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கும் போது, இந்தத் துறையில் அதிகாரிகளுக்கு காணப்பட்ட நிபுணத்துவம் குறைவு என்பதால், கனிய வளங்கள் அதிகார சபையை ஸ்தாபிப்பதன் மூலம் நிபுணர்களுக்கு இந்த பணியை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம்.

அதேபோன்று, கடந்த காலங்களில் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது உள்ளிட்ட ஒழுங்குபடுத்தும் அதிகாரம் அமைச்சரை மையப்படுத்தி காணப்பட்டதால் அமைச்சர்கள் மாறும் போது அனைத்து நடவடிக்கைகளுக்கும் தடை ஏற்பட்டது. இதனால் அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த அனைத்து அதிகாரங்களையும் இந்த அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கு வழங்க நாம் நடவடிக்கை எடுத்தோம். அதேபோன்று, பழமையான வரைபடங்களுக்கு பதிலாக எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வுக்கு நவீன வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பல பில்லியன் டொலர் இதற்கு முதலிட வேண்டும் எனவும் இந்தப் பெரிய முதலீடுகளை பாதுகாக்க தேவையான பலம் வாய்ந்த நிதிக் கட்டமைபை அறிமுகப்படுத்துவதும், அமைச்சருக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் விசேடகுழுவொன்று நியமிக்கப்படுவதும் இந்த சட்டமூலத்தின் ஊடாக இடம்பெறுகின்றது. பொதுவாக உலகில் எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வின் போது ஒரு நாட்டில் ஏழு கிணறுகள் அகழ்வு செய்யும்போது ஒன்றுதான் வெற்றியடைகின்றது. நோர்வே நாட்டில் 31 அகழ்வுகளின் பின்னர்தான் முதலாவது வெற்றி கிட்டியது. ஆனால் இலங்கையில் 4 கிணறுகள் அகழ்வுசெய்யப்பட்ட போதிலும் அதில் 3 வெற்றியடைந்துள்ளன என்றார். (ம-44)

## ஜோஷித....

பிரதமர் அலுவலக பிரதானி யோஷித ராஜபக்சவை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் விசேட கோரிக்கையையடுத்தே அஜித் நிவார்ட் கப்ரால் தனது அமைச்சுப் பொறுப்பையும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் இராஜினாமா செய்யவுள்ளார். இதையடுத்தே அவரின் இடத்துக்கு ஜோஷிதவை நியமிக்க பரிசீலிக்கப்படுகின்றது.

எனினும், ஜோஷித ராஜபக்ச, தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வருவதற்கு ஆளும் கட்சிக்குள் ஒரு தரப்பால் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்சவின் வருகைக்காகத் தேசியப் பட்டியல் எம்.பி.பதவியை இராஜிநாமா செய்த ஜயந்த கெட்டகொடவுக்கு மீண்டும் தேசியப்பட்டியல் எம்.பி. பதவியை வழங்க வேண்டும் என்று குறித்த தரப்பால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-22)

## பெரிய....

இறக்குமதி வரி விதிக்கப்படவுள்ளது. இதனால் பெரிய வெங்காயத்தின் விலையில் இன்றுமுதல் பெரியளவில் மாற்றங்கள் ஏற்படலாம். (ம)

## எரிகாயங்களுக்கு....

சிராணி (வயது 58) என்ற அந்தப் பெண் மீட்டர் வட்டிக்குப் பணம் வாங்கியுள்ளார். அதைத் திரும்பிச் செலுத்த முடியாத நிலையில் கடந்த 24ஆம் திகதி மாலை தனக்குத் தானே தீவைத்துள்ளார். இதையடுத்து எரிகாயங்களுடன் மீட்கப்பட்ட அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

## மேலும்....

தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 504ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் உயிரிழந்த 184 பேரில் 87 பெண்களும், 97 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணம் வென்றது இலங்கை!

**காணி தேவை**

நல்லூர், திருநெல்வேலி பகுதியில் இரண்டு பரப்புக்கு மேற்பட்ட காணி தேவை.

தொடர்பு: 077 869 4016

கொழும்பு, செப். 8

**தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றி பெற்று மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரை 2:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது இலங்கை அணி.**



முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 9 இலக்குகளை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது. அசலங்க அதிகபட்சமாக 47 ஓட்டங்களையும், தனஞ்சய டி சில்வா 31 ஓட்டங்களையும், சமீர 29 ஓட்டங்களையும் பெற்றனர். நீண்ட நாள்களின் பின்னர் அணிக்குள் இணைக்கப்பட்ட சந்திமல் வெறும் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் மகாராஜ் 3 இலக்குகளையும், லின்டி, சம்சி இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி சுழல்பந்து வீச்சுக்கு ஆடுகளம் சாதகமானதை அடுத்து ஆரம்பம் முதலே தடுமாறியது. நம்பிக்கை நட்சத்திரமான எய்டன் மார்க்ரம் வெறும் 2 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார். ஹென்றிக்ஸ் ஓர் ஓட்டத்துடனும் வான் டெர் டசன் 5 ஓட்டங்களுடனும் வெளியேற்றப்பட்டனர். இதையடுத்து தென்னாபிரிக்க அணி 19 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து தவித்தது.

அறிமுக வீரர் தீக்சனவின் பந்துவீச்சு பேரெழுச்சி பெற்றது. கட்டுக்கோப்பான பந்துப்பரிமாற்றங்களை அவர் வீசிக்கொண்டிருந்தார். வனிந்து ஹசரன்க,



பிரவீன் ஜெயவிக்ரமவும் சிறப்பாகச் செயற்பட்டதை அடுத்து தென்னாபிரிக்க அணி வெறும் 125 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. 78 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது இலங்கை அணி.

ஆட்டநாயகனாக சமீரவும், தொடராட்ட நாயகனாக அசலங்கவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ம)

## இலங்கை - தெ.ஆபிரிக்கா ரி20 தொடர் வெள்ளியன்று

கொழும்பு, செப். 8

தென்னாபிரிக்கா- இலங்கை அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் முடிவடைந்த நிலையில், அடுத்ததாக ரி20 தொடர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

மூன்று ஆட்டங்கள் ரி20 தொடரில் உள்ளன. மூன்று ஆட்டங்களும் முறையே செப்ரெம்பர் 12, 14, 16ஆகிய திகதிகளில் இடம்பெறவுள்ளன. (ம)

# இங்கிலாந்தை தோற்கடித்து இந்தியா வரலாற்று வெற்றி!




லண்டன், செப். 8

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி 157 ஓட்டங்களால் இமாலய வெற்றி பெற்று தொடரில் 2:1 என்று முன்னிலை வகிக்கின்றது.

இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடிவருகின்றது. முதலாவது ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. இரண்டாவது ஆட்டம் லோட்ஸில் நடைபெற்றது அதில் இந்தியாவும், லீட்ஸில் நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்தில் இங்கிலாந்தும் வெற்றிபெற்றன.

நான்காவது ஆட்டம் ஓவலில் கடந்த 2ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரை நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. சர்துல் தாக்கூர் 57 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் வோக்ஸ் 4 இலக்குகளையும், றொபின்சன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 290 ஓட்டங்களைப் பெற்று 99 ஓட்டங்கள் முன்னிலை வகித்தது. ஒலி போப் 81 ஓட்டங்களையும், வோக்ஸ் 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் உமேஸ் யாதவ் 3 இலக்குகளையும், பும்ரா, ஜடேஜா இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய அணி மிக நேர்த்தியான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அந்த அணி 466 ஓட்டங்களை இரண்டாவது இன்னிங்ஸுக்காகப் பெற்று ஆச்சரியப்படுத்தியது. ரோகித் சர்மா அதிக பட்சமாக 127 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் வோக்ஸ் 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இங்கிலாந்து அணிக்கு 368 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணி 210 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்ததை அடுத்து இந்திய அணி 157 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. பந்துவீச்சில் உமேஸ் யாதவ் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம)

# ரி20 உலகக்கிண்ணம் இந்திய அணி இன்று அறிவிப்பு



புதுடில்லி, செப். 8

ரி20 உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணி இன்று அறிவிக்கப்பட வாய்ப்புள்ளது என்று கருதப்படுகின்றது. 23 பேர் கொண்ட குழாமாக அணி அறிவிக்கப்படலாம்.

இந்திய அணியில் தொடக்க வீரர்களுக்கு கே.எல். ராகுல், ரோகித் சர்மா கூட்டணி வலுவாக இருக்கிறது. இதில் கே.எல்.ராகுலைச் சேர்ப்பதன் மூலம் கூடுதலாக இலக்குக் காப்பாளர் தெரிவு இருக்கும். ஒருவேளை ரோகித் சர்மாவுடன் சேர்ந்து கோலி ஆட்டத்தைத் தொடங்கினால், மூன்றாம் நிலையில் சூர்யகுமார் யாதவுக்கு வாய்ப்புக கிடைக்கும். நடுவரிசையில் ராகுல் களமிறங்குவார்.

தவான், பிருத்வி இருவரும் மேலதிக ஆரம்ப வீரர்களாக அணியில் இடம்பிடிப்பார்கள். நடுவரிசையில் ஸ்ரேயாஸ் தெரிவுசெய்யப்படுவார் என்று கருதப்படுகின்றது. கடந்த மார்ச் மாதத்துக்குப் பின் எந்தவிதமான போட்டியிலும் ஸ்ரேயாஸ் காயம் காரணமாக விளையாடவில்லை. இதனால் ஐ.பி.எல் தொடரில் அவரின் செயற்பாடு தொடர்பில் எதிர்பார்ப்பு உள்ளது.

சகலதுறை வீரர்களைப் பொறுத்தவரை ஹர்திக் பாண்டியா, ரவீந்திர ஜடேஜா இருவரும் தெரிவுசெய்யப்படலாம். சுழற்பந்து வீச்சாளர்களைப் பொறுத்தவரை சஹல், ராகுல் சஹர், வருண் சக்ரவர்த்தி ஆகியோருக்கு இடையே கடும் போட்டி இருக்கிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.